விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உட்பட
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-1926)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 07 புதன்கிழமை (21.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

### தந்தையை விடுதலை செய்யக்கோரி
## அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் ஜனாதிபதிக்கு கடிதம்



(கிளிநொச்சி)

தமதுதந்தையை கருணை அடிப்படையில் விடுதலை செய்து, பெற்றோரை இழந்து நிற்கும் எமக்கு உதவுமாறு அரசியல் கைதியான சச்சி தானந்தம் ஆனந்த சுதாகர னின் மகன் மற்றும் 23

## முன்னாள் போராளிகளுக்கு நட்ட ஈடுகள் இல்லை
### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரம் உட்பட பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத் தொகையை முன்னாள் போராளிகளுக்கும் வழங்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான 23

### நடராஜன் காலமானார்
## 15 நாள் பரோலில் வெளிவந்தார் சசிகலா



12

# இலங்கை குறித்த அறிக்கை இன்று ஜெனிவாவில் சமர்ப்பிப்பு

## அறிக்கை மீதான விவாதமும் இடம்பெறவுள்ளது

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமை பேரவை யில் இன்று நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இலங்கை அரசாங்கமானது ஜெனிவா பிரேரணையை எவ்வாறு அமுல் படுத்துகின்றது என்பது குறித்த விரி வான அறிக்கையொன்றை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கவுள் ளது. (23 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் வங்கியில் ஆயுத முனையில் கொள்ளை

(கொழும்பு)

தனியார் வங்கி ஒன்றில் சுமார் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் கத்திமுனையில் கொள்ளை யிடப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கிரிபத்கொடையிலுள்ள தனியார் வங்கி யொன்றிலேயே இந்த கொள் ளைச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. 23

உள்ளே...
தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே...

### ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில்
## இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படும்
### பிரித்தானியா அறிவிப்பு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினது 30 இன் கீழ் 1 மற்றும் 34 இன் கீழ் 1 ஆகிய இரண்டு பிரேரணைகளின் பரிந்துரைகளும் முழுமையாக அமுலாக்க இலங்கைக்கு தொடர்ந் தும் அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரித்தானியா தெரிவித்துள் ளது. 23

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுத்தர
## ஐ.நா சபை அங்கத்துவ நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்
### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையில் தாம் அளித்த வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான கால அட்டவணையை இலங்கை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என மனித உரிமை கள் கண்காணிப்பகம் வலியுறுத்தி யுள்ளது. 23

## முள்ளிவாய்க்காலில் மீண்டும் தங்கவேட்டை!

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாக கூறப்படும் தங் கத்தை தேடி முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் நேற்று அகழ்வு இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் 23

## நம்பிக்கையில்லா பிரேரணை
### ரணில் - சம்பந்தன் ரகசிய சந்திப்பு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கை யில்லா பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராக வாக்களிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. 23

### ஜெனிவாவில் இலங்கைக்கு அழுத்தம் வழங்குமாறு
## அமெரிக்காவிடம் உதவிக்கரம் நீட்டிய தமிழ் பிரதிநிதிகள்

(நியூயோர்க்)

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கு மாறு தமிழ் பிரதி 23



நெல்லியடியில் கடந்த பத்து வருடங்களாக
வெளிநாடுகளுக்கான துரித பார்சல்கள், கடிதங்கள் சேவை.
DHL EXPRESS
aramex
delivery unlimited
(C-1942)
மணி நெற் கொம் நெல்லியடி மத்திய கல்லூரி வீதி.
021 226 4877 / 077 506 8787 maninetcomm@gmail.com

### ஆலயக் குருக்கள் சுட்டுக்கொலை
## சிப்பாய் உட்பட மூவருக்கு தூக்கு வழங்குமாறு பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

ஆலயக் குருக்களைத் துப்பாக்கி யால் சுட்டு கொலை செய்த வழக்கில் இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட மூவ ருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிடம் அரச சட்டவாதி நாகரட் 24

# மரண அறிவித்தல்

## திருமதி முருகேசு அன்னக்கொடி

பிறப்பு 15 - 07 - 1948



இறப்பு 16 - 03 - 2018

யாழ்.நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும், மாமுனையை வதிவிடமாகவும், ஐக்கிய அமெரிக்காவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அன்னக்கொடி அவர்கள் 16-03-2018 வெள்ளிக்கிழமை அன்று ஐக்கிய அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், முருகேசு (ஐக்கிய அமெரிக்கா) அவர்களின் அன்பு மனைவியும், கிருஸ்னேஸ்வரி (ஐக்கிய அமெரிக்கா), கிரிதரன் (லண்டன்),. மாதவன் (கிளாஸ்கோ), முரளிதரன் (ஐக்கிய அமெரிக்கா), யசோதா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஆனந்தராசா (ஓய்வுபெற்ற அஞ்சல் அலுவலர்), ஆனந்தமூர்த்தி (விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்), அன்னகேசரி (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), அன்னரூபி (முன்னாள் ஆசிரியை-நாகர்கோவில் மகா வித்தியாலயம்-கிளாஸ்கோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜகோபாலா (ஐக்கிய அமெரிக்கா), விஜயகவிதா (லண்டன்), கயந்தினி (ஐக்கிய அமொரிக்கா), கிரிஜா (கிளாஸ்கோ), பரமேஸ்வரன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷ்ணா (ஐக்கிய அமெரிக்கா), அபிராமி (லண்டன்), விஜிதரன் (லண்டன்), லாவன்யா (கிளாஸ்கோ), அபிமன்யு (கிளாஸ்கோ), மதுஜன் (கிளாஸ்கோ), யதுராம் (ஐக்கிய அமெரிக்கா), யதுசா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:பாலா(குலம்)-ஐக்கிய அமெரிக்கா:+19529942024, புனிதா-ஐக்கிய அமெரிக்கா :+19522125260, கிரி-ஐக்கிய அமெரிக்கா:+19528469391, மாதவன்-பிரித்தானியா:+447576660777, அன்னலட்சுமி-இலங்கை:+94763267317

முகவரி:
Minneapolis Chapel 4343
Nicollet Avenue South,
Minneapolis MN 55409

(சி-1940)

# நிரந்தர நியமனம் கிடைக்காததால் தொண்டர் ஆசிரியை உயிர் மாய்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியை ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.10 வருடங்களுக்கு மேலாக பணியாற்றியும் நிரந்தர நியமனத்திற்காக தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்ட போதும், நியமனம் கிடைக்காத மன விரக்தியில் நேற்று மாலையில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-4)

20th March 2018

To the Members of the Alumni Faculty of Medicine Jaffna

**NOTICE OF MEETING**

Notice is hereby given that the 3rd Annual General Meeting (adjourned)of the Alumni, Faculty of Medicine and Jaffna Will be held at the Board Room, Faculty of Medicine,Jaffna at 2.00 p.m on Saturday 21st April 2018 for the following purposes.

1. To receive and adopt the report of the Committee and the Audited Accounts for the year ended 31st December 2017.
2. To Consider any other business of which due notice has been given.

BY ORDER OF THE COMMITTEE OF MANAGEMENT
Vinayagamoorthy Elankumar
SECRETARY, THE ALUMNI FACULTY OF MEDICINE JAFFNA

(3305)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### வேலையாட்கள் தேவை

யாழ்.திருநெல்வேலியில் திறக்கப்படவுள்ள ஆண்களுக்கான ஆடைக் காட்சியறையில் Showroomக்கு Manager, Cashier ஆக வேலை செய்வதற்கு 20-40 வயதிற்கு உட்பட்ட ஆண் வேலையாள் தேவை.

**தொடர்புகளுக்கு: 0768757652**

(3304)

### பெண் வேலையாட்கள் தேவை

யாழ்.கச்சேரிக்கு அண்மையில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு:0772515951**

(3306)

### தேவை

A9 வீதியில் பளை, பரந்தன், ஆனையிறவு போன்ற இடங்களில் 10-15 ஏக்கர் வரையிலான காணி தேவை.
(நீர்வேலி, அச்சுவேலி பகுதி விரும்பத்தக்கது)

**தொடர்புகளுக்கு:-0764027733**

### விற்பனைக்கு

மாலுசந்தியில் வீட்டுடன் கூடிய 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்புக்கு:0773204433**

# முதலாம் ஆண்டு நினைவினில்...

பிறப்பு 01 - 11 - 1951



இறப்பு 16 - 02 - 2017

## திருமதி சிவ்சோதி காசிநாதன்

பிறப்பு 04 - 06 - 1938



இறப்பு 22 - 12 - 2016

## திரு.தம்பிப்பிள்ளை காசிநாதன்

(ஓய்வுபெற்ற பிரதிப் பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
Former-Deputy Registrar University of Jaffna)

கல்விக்காய் சேவையாற்றி கலங்கரை விளக்காய்
உயர்ந்து நிற்கும் உன்னத தெய்வங்களே!
ஆண்டுகள் ஓடி மறையும் அழியாது உம் சேவைகள்
ஒளியாய் வீசி நிற்கும் என்றும் உம் நினைவுகளுடன்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

(சி-1941)

-குடும்பத்தினர்

# சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் இலங்கையை முன்னிலைப்படுத்துங்கள்

## ஐ.நாவில் கஜேந்திரகுமார் வலியுறுத்து



(ஜெனிவா)

இலங்கை அரசாங்கத்தை, உரோம் பிரகடனத்தின் படி சர்வதேச குற்றவியல் மன்றத்தின் முன்பாக ஆஜராக தாமாகவே முன்வர வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திற்கு முன்னிலைப்படுத்துவதைப் பற்றியும் தீர்மானிக்க வேண்டியது அங்கத்துவ நாடுகளின் கடமையாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில்,

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான மீளாய்வு அமர்வின்போது இடைமாற்று நீதிப்பொறிமுறைகளை, அதனது கடப்பாடுகளுடன் இணைந்ததாக, உடனடியாக இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என அதனது தீர்மானம் இல 30/1 இன் மூலமாக அநேக நாடுகள் வலியுறுத்தியிருந்தன.

30 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஒன்றை நிறுவியதைத் தவிர வேறு எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

அந்த அலுவலகம் கூட இருவாரங்களுக்கு முன்புதான் செயற்பட ஆரம்பித்துள்ளது. அந்த அலுவலகம் செயன்முறை அதிகாரங்கள் எதுவுமில்லாததாலும், அதன் அலுவலர்கள் மீதான நம்பகத்தன்மையற்ற நிலை காணப்படுவதாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நெருங்கிய தமிழ் உறவினர்களால் முற்று முழுதாக ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல், சர்வதேச சட்டங்களின் படி மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் குற்றச் செயல்கள் புரிந்த சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்பதே ஜனாதிபதியும் பிரதமரும் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் அடிக்கடி கூறிவரும் விடயமாகும்.

உண்மையில் அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் பிரசாரங்களின் போது தாங்கள், தான் முன்னைய அரசாங்கத்தையும் அதன் தலைவர்களையும் இராணுவ வீரர்களையும் யுத்தக் குற்றங்களிலிருந்து வெற்றிகரமாகக் காப்பாற்றியவர்கள் என்று பெருமிதமாக கூறிவந்ததையும் கவனிக்க வேண்டும்.

இலங்கை தொடர்பான இந்த அமர்வின் போது குற்றச் செயல்கள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெறுமனே காலங்கடத்தும் ஏமாற்றும் செயற்பாடுகளாகவே அமையும் என்பது தெளிவு.

எனவே இலங்கை அரசாங்கத்தை, உரோம் பிரகடனத்தின் படி சர்வதேச குற்றவியல் மன்றத்தின் முன்பாக ஆஜராக தாமாகவே முன்வர வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திற்கு முன்னிலைப்படுத்துவதைப் பற்றியும் தீர்மானிக்க வேண்டியது அங்கத்துவ நாடுகளின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உள்ளூராட்சி சபை தேர்தல் தமிழ்க் கூட்டமைப்பு கடும் சவாலாக இருந்தது

## சித்தார்த்தன் எம்.பி.சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு கடும் சவாலாக இருந்தது என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநோச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மக்கள் மீளவும் எங்கள் பக்கம் வர நீங்கள் செயற்பட வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களே வட்டார மக்களுடன் நெருக்கமாக பழகுகின்றவர்கள். ஆகவே நீங்கள் தான் மக்களிடையே ஆதரவைப் பெற வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளை நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் சீராக நடத்த வேண்டும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பை மீண்டும் மக்களுடைய இயக்கமாக மாற்றி அமைக்க செயற்பட வேண்டும். என்றும் இல்லாதவாறு இந்த தேர்தல் கடும் போட்டி கொண்ட தேர்தலாக காணப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இரகசிய வாக்கெடுப்புக்கு கையுயர்த்தக் கூடாது

## கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழப்பாணம்)

இரகசிய வாக்கெடுப்புக்கு கையுயர்த்த கூடாது, இரகசிய வாக்களிப்பு நடைபெற்றாலும் யாருக்கு வாக்களித்தீர்கள் என்று எமக்கு தெரியப்படுத்த வேண்டும். கட்சியின் முடிவுகளுக்கே அடிபணிய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு அறிவுறுத்தினர்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வீழ்ச்சி கண்டது உண்மைதான். மக்களிடையே கூட்டமைப்பு தொடர்பில் அதிக அதிருப்திகள் காணப்பட்டிருந்தன. நீங்கள் மக்களிடம் சென்ற போது பேச்சு வாங்கியிருப்பீர்கள் என்பதும் எமக்கு தெரியும்.

மக்கள் மத்தியில் சரிந்துள்ள ஆதரவை மீண்டும் தூக்கி நிறுத்தும் பொறுப்பு கடமை உங்களிடம் உள்ளன. பாராளுமன்ற, மாகாண சபைகளை விட அதிகாரங்களை கொண்ட சபையாக உள்ளூராட்சி சபை காணப்படுகின்றது. உங்கள் கிராமங்களில் அல்லது வட்டாரங்களில் மக்கள் பிரச்சினைகளை இனம் கண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துங்கள். இந்தக் கூட்டம் நேரம் தவறி ஆரம்பித்தது போன்று இல்லாது கொடுக்கப்படுகின்ற நேரத்திற்கு எல்லாவற்றையும் செயற்படுத்துங்கள்.

தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்றதால் தான் யானை கட்சியும், தாமரை மொட்டும் தமிழர் பிரதேசங்களில் ஆசனங்களை கைப்பற்றியுள்ளன. இனி வரும் காலங்களில் இது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும். இது மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கும் சபை. ஆகையால் கட்சிகளின் கொள்கையைப் பார்க்க முடியாது. எனவே ஏனைய தமிழ் கட்சிகள் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

சிங்கள கட்சிகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி விடக் கூடாது. அது எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். இந்த தேர்தல் முறைமை கட்சியின் செயலாளருக்கு அதிக அதிகாரம் வழங்கியுள்ளது. ஆகவே கட்சியின் முடிவுகளுக்கு அனைவரும் அடிபணிய வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள எமது உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்புக்கு கையுயர்த்த கூடாது. இரகசிய வாக்கெடுப்பின் போதும் யாருக்கு வாக்களித்தீர்கள் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு கூறாவிட்டாலும் வாக்குகளை எண்ணிப் பார்த்தால் யார் வாக்களித்தார்கள் என்று தெரியும்.

கட்சின் முடிவுக்கு மாறாக வேறு யாருக்கும் வாக்களித்தால் அல்லது தவிசாளராக நினைத்தால் அவர்கள் நீக்கப்படுவீர்கள் என குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் அறிவுறுத்தினார். (இ-4)

# இராசி பலன்

**மீனம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், உஷ்ணசம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பொது நல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள்.

**மேடம்:** வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்,வெளியூர்த் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்த படி கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வழியில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

**கும்பம்:** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் புத | சந் | | |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை இரவு 1.00மணிக்கு இடபம், சந் | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | குரு | | |

**21.03.2018**

பங்குனி 07, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு

சதுர்த்தசி பிற்பகல் 4.09 மணிவரை

பரணி முன்னிரவு 7.35 மணிவரை

சுபநேரம் 4.47-6.17 மணிவரை

இராகுகாலம் 12.17-1.47 மணிவரை

சதுர்தசி விரதம்,சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.


**சிம்மம்:** வியாபார விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**தனுசு:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், காலை நேரத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுவாரஸியமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் சேரும் நாள், பொது நலனில் அக்கறை காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, காரியஅனுகூலமுண்டு.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரையமாகலாம், கௌரவக் குறைவான நாள்.



## ரஷீட் கான் 5/41

# ஐ.அ.எமிரேட்ஷின் அழுத்தத்தின் மத்தியில் ஆப்கானிஸ்தான் துணிச்சல் வெற்றி

உலகக் கிண்ண தகுதிச் சுற்று சுப்பர் - 6 ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி, 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் யு.ஏ.இ., அணியை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் உலகக் கிண்ண அரங்கில் தனது ஸ்தானத்தை நிலைப்படுத்திய அதேவேளை, யு.ஏ.இ., தொடரில் இருந்து பரிதாபகரமாக வெளியேறியது.

உலகக் கிண்ண (2019) தகுதிச்சுற்றுக்கான, 'சுப்பர்-6' போட்டிகள் தற்போது நடைபெறுகின்றன.

இதில் நேற்று நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) அணிகள் மோதின.

முதலில் களமிறங்கிய யு.ஏ.இ., அணி 43 ஓவர்களில் 177 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அபாரமாக பந்துவீசிய ஆப்கானின் ரஷீட் கான் 41 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எளிய இலக்கை விரட்டிய ஆப்கானிஸ்தான் அணியின் முன்வரிசை விக்கெட்டுக்கள் விரைவில் சரிய, 5 விக்கெட்டுக்களை வெறும் 54 ஓட்டங்களுக்கு இழந்து தத்தளித்தது.

எனினும் அதன்பின் இணைந்த குல்படின் (74), நஜிபுல்லா (63) இருவரும் வீழ்த்தப்படாத 6ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 19.2 ஓவர்களில் 124 ஓட்டங்களை பகிர்ந்து அணியை கரைசேர்த்தனர்.

ஆப்கானிஸ்தான் அணி, 34.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (178 ஓட்.) 5 விகெட்டுக்களால் அடைந்தது.

"சுப்பர்-6" சுற்றில் முதல் இரு இடம்பிடிக்கும் அணிகள், உலகக் கிண்ண தொடருக்கு வாய்ப்புப் பெறும்.

இதுவரை நடந்த போட்டிகளின் அடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகள் (6), சிம்பாப்வே (5), ஸ்கொட்லாந்து (5) அணிகள் முதல் மூன்று இடத்தில் உள்ளன. அயர்லாந்து (4), ஆப்கானிஸ்தான் (4) அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. யு.ஏ.ஐ., (0), உலக கிண்ண வாய்ப்பை இழந்தது.


## மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் மற்றும் வியாபார நிலையங்களில் கழிவுநீர், மலசல கழிவுநீர் என்பவற்றை அகற்றுவதற்கான கேள்வி கோரல்

கேள்வி இல: JMC/WD/03/W.M/2018

01 யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைக்கு அமைய மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் மற்றும் வியாபார நிலையங்களில் கழிவு நீர், மலசல கழிவுநீர் என்பவற்றை அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 221 6468, 021 222 2019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் 21.03.2018ம் திகதியிலிருந்து 04.04.2018 வரை காலை 9.30 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.500.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

04. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 05.04.2018ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

05. கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்களுக்கு (07.06.2018வரை) செல்லுபடியாகும்.

06. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக் கூட்டம் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 29.03.2018ம் திகதி மு.ப 10.30க்கு நடைபெறும்.

07. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| | |
|---|---|
| 1. | மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அகற்ற வேண்டும். |
| 2. | மாநகர சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களிற்கு அமைவாக சேவை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| 3. | மாநகர சபையின் நடைமுறைக்கேற்ப மேற்படி கழிவு அகற்றுவதற்கான பணத்தினை செலுத்தி முத்திரைகளை பெற்றுக் கொள்ள முடியும். |
| 4. | காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை சேவைகள் நடைபெற வேண்டும். |
| 5. | மேற்படி இந்நடைமுறை மூலம் அறவிடப்படும் பணத்தில் 60% கழிவு நீர் அகற்றும் பணியில் ஈடுபடுபவர்களுக்கும் 40% மாநகர சபை பகுதிக்கும் உரித்துள்ளது. மேற்படி 40%இல் யார் கூடுதலான வீதத்தினை மாநகர சபைக்கு வழங்க உள்ளார்களோ அவர்களே சித்தி பெற்றவர்களாக கருதப்பட்டு அவர்களால் கோரப்படும் தொகையில் சராசரி கணிக்கப்பட்டு அதனை சித்திகர விலைக்கூற்றாக ஏற்றுக் கொள்ளப்படும். |
| 6. | மேற்படி சித்திகர கேள்விதாரர்களின் தொகை எமது தேவைக்கு ஏற்ப பெற்றுக் கொள்ளப்படும். |
| 7. | தனிப்பட்ட நோக்கம் கருதிச் சேவையில் ஈடுபடுத்தப்படும் விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "தனிப்பட்ட விண்ணப்பம்" எனவும் வியாபார நோக்கம் கருதி விண்ணப்பிப்பவர்கள் "வியாபார நோக்கத்திற்கான விண்ணப்டம்" எனவும் குறிப்பிடவும். |
| 8. | தனிப்பட்ட நோக்கங்களுக்கான விண்ணப்பதாரிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்கென ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| 9. | மாநகர சபையினால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் வீதத்திற்கான தொகையை மட்டும் மாநகர சபைக்கு செலுத்தினால் போதுமானது. |
| 10. | நிபந்தனைக்கு மாறான சேவைகள் ரத்துச் செய்யப்படும். |
| 11. | ஒப்பந்தகாலம் 1 வருட காலம் ஆகும். |

**தலைவர்/ஆணையாளர்,**
பிராந்திய பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
20.03.2018

(C-1943)


## அப்பாடா... ரபாடா

# தென்னாபிரிக்கா நிம்மதி



அவுஸதிரேலியாவுக்கு எதிரான மீதமுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் ரபாடாவுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகளின் நிறைவில் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது.

இதில் போர்ட் எலிசபெத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில், அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித்தை ஆட்டமிழக்கச் செய்த ரபாடா, அதன்போது, அவரின்தோளின மீது உரசி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இதனால் இவருக்கு 3 அபராத புள்ளிகள் வழங்கப்பட்டன. 24 மாதத்தில் மொத்தம் 8 புள்ளி பெற்றதால், மீதமுள்ள இரண்டு போட்டிகளில் பங்கேற்க சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) தடை விதித்தது.

### ஆறு மணி நேரம் விசாரணை

இதை எதிர்த்து, தென்னாபிரிக்க நிர்வாகம் சார்பில் ஐ.சி.சி., நடத்தை விதிமுறை குழுவில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இதுகுறித்து, 'வீடியோ கொன்பரன்ஸ்' முறையில், கமிஷனர் மைக்கல் ஹெரான சுமார் 6 மணி நேரம் விசாரணை நடத்தினார்.

தென்னாபிரிக்கா சார்பில் வழக்கறிஞர் மோபுோ ஆஜரானார். இதன்பின், ஹெரான் சார்பில் ஐ.சி.சி., வெளியிட்ட அறிக்கையில்,

'தென்னாபிரிக்காவின் ரபாடா, மற்றொரு வீரருக்கு தர வேண்டிய மரியாதையை தரவில்லை. இதை மிகப்பெரிய குற்றமாக எடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

இதனால், போட்டி மத்தியஸ்தர் அளித்த தண்டனையை குறைக்கிறேன். போட்டி சம்பளத்திலிருந்து 50 சதவீத அபராதம், 25 சதவீதமாக குறைக்கப்படுகிறது. மூன்று அபராத புள்ளிகள் ஒரு புள்ளியாக மாற்றப்படுகிறது,' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ரபாடாவின் ஒட்டுமொத்த அபராத புள்ளி ஆறாக குறைந்ததால், மீதமுள்ள இரண்டு டெஸ்டிலும் விளையாடலாம். இதனால் தென்னாபிரிக்க அணி நிம்மதி அடைந்துள்ளது.

# ஏங்க வைக்கும் என் சென்னை

## தினேஷ் கார்த்திக் ஆதங்கம்

ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக விளையாட முடியவில்லை என்பது வருத்தமாக உள்ளது என தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்தார்.

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதிய முத்தரப்பு 'ரி20' தொடரின் இறுதிப் போட்டி கொழும்பில் நடந்தது.

இதில் வெற்றிக்கு கடைசி பந்தில் 5 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், சிக்சர் அடித்து. இந்தியாவுக்கு கிண்ணம் வென்று கொடுத்தார் தினேஷ கார்ததிக். தவிர, கடைசி நேரத்தில், 8 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்து, மிரட்டினார்.

ஒரே பந்தில் உலக 'ஹீரோ' ஆகிவிட்ட தினேஷ் கார்த்திக் நேற்று சென்னை திரும்பினார்.

### கலக்கிய வோஷிங்டன்

இது குறித்து தினேஷ் கார்த்திக் கூறியதாவது, முத்தரப்பு தொடரின் இறுதிப் போட்டியில் கடைசி பந்தில் சிக்சர் அடித்தால்தான் வெற்றி என்ற நிலை இருந்தது. இருப்பினும், முடிந்தவரை பவுண்டரி அடித்து விடலாம் என திட்டமிட்டேன். கடைசியில் சிக்சர் அடித்து வென்றது மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு வேளை தோற்றிருந்தால், மிகவும் கஷ்டமாக இருந்திருக்கும். இத்தொடர் முழுவதும் வோஷிங்டன் சுந்தர், சகால் கூட்டணி சுழலில் கலககியது. அதேநேரம், வோஷிங்டன் சுந்தர் 'பவர் பிளே'யில், குறைந்தது மூன்று ஓவர்கள் வீசுவார். இது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில், மறுபுறம் வேகங்கள் ஓட்டங்களை கட்டுப்படுத்த முயற்சிக்கும் நிலையில், சுழலில் துடுப்பாட்ட வீராகள் ஓட்டங்கள் குவிக்க திட்டமிடுவர். ஆனால சுந்தர் சிறபபாக செயல்பட்டார். இதேபோல, விஜய் ஷங்கரும் நன்றாக விளையாடினார்.

### சீனியர் அஷ்வின்

இப்போதுள்ள இந்திய அணியில் அஷ்வின், அபினவ் முகுந்த், முரளி விஜய், சுந்தர், ஷங்கர் மற்றும் நான் உட்பட 7 தமிழக வீரர்கள் இருப்பது நல்ல விடயம். இதில், 'சீனியர்' அஷ்வின் தான். டெஸ்டில 300க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

### தமிழ் எளிது

முத்தரப்பு தொடரில் சுந்தர், ஷங்கரிடம் தமிழில் பேசியதாக எல்லோரும் கூறுகிறார்கள். இதில் வியப்பு ஒன்றும் இல்லை. இவர்களிடம் நான் எப்போதும் தமிழில் தான் பேசுவேன். இதைத் தான் போட்டிகளின் போதும் செயதேன். இங்கு ஆங்கிலத்தில் பேசியிருந்தால் தான் வித்தியாசமாக இருக்கும். மற்றபடி, எதிரணி வீரர்களுக்கு புரியக்கூடாது. எங்களுக்கு இடையிலான 'ஸ்பெஷல்' திட்டமிடல் என்றெல்லாம் எதுவும் கிடையாது. இவ்வாறு தினேஷ் கார்த்திக் கூறினார்.

# நீங்கள் சிறந்த நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு

# நாங்கள் வழிகாட்டுவோம்

## இலங்கை மத்திய வங்கியின் முன் முயற்சி

நிதிசார் விடயங்களில் வடமாகாண மக்களுக்கு வழிகாட்டும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள உதவிக் கருமபீடத்திற்கு மேலதிகமாக வட மாகாணத்திலுள்ள மாவட்ட செயலகங்களுடன் இணைந்து ஐந்து உப உதவிக் கருமபீடங்கள் ஒவ்வொரு மாவட்ட செயலகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்படி கருமபீடங்களை நேரிலோ அல்லது பின்வரும் தொடர்பாடல் வழிமூலங்களினூடாகவோ தொடர்புகொண்டு நிதிசார் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்கள் தயவோடு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### யாழ்ப்பாணம் 021-222 5000

| | |
|---|---|
| அலுவலகம் | : அறை எண் 14, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் |
| முகவரி | : கண்டி வீதி, யாழ்ப்பாணம் |
| தொலைநகல் இல. | : 021-222 2355 |
| மின்னஞ்சல் முகவரி | : mfhelpdesk2018@gmail.com |

### கிளிநொச்சி 021-228 5356

| | |
|---|---|
| அலுவலகம் | : மாவட்ட செயலகம், கிளிநொச்சி |
| முகவரி | : A9 வீதி, கிளிநொச்சி |
| தொலைநகல் இல. | : 021-228 5760 |
| மின்னஞ்சல் முகவரி | : dpskilinochchi@gmail.com |

### மன்னார் 023-222 2283

| | |
|---|---|
| அலுவலகம் | : திட்டமிடல் பிரிவு, மாவட்ட செயலகம், மன்னார் |
| முகவரி | : பிரதான வீதி, மன்னார் |
| தொலைநகல் இல. | : 023-222 2161 |
| மின்னஞ்சல் முகவரி | : gamannar@gmail.com<br>dpsmnr@gmail.com |

### முல்லைத்தீவு 021-229 0336

| | |
|---|---|
| அலுவலகம் | : மாவட்ட செயலகம், முல்லைத்தீவு |
| முகவரி | : மாங்குளம்-முல்லைத்தீவு நெடுஞ்சாலை, முல்லைத்தீவு |
| தொலைபேசி இல. | : 021-320 0876 |
| தொலைநகல் இல. | : 021-229 0134 / 021-229 0045 |
| மின்னஞ்சல் முகவரி | : ads.mullaitheevu@gmail.com<br>muinddept@gmail.com |

### வவுனியா 024-222 2138

| | |
|---|---|
| மாவட்டம் | : வவுனியா |
| அலுவலகம் | : அறை எண் 03, மாவட்ட செயலகம், வவுனியா |
| முகவரி | : A9 வீதி, வவுனியா |
| தொலைநகல் இல. | : 024-222 2138 |
| மின்னஞ்சல் முகவரி | : gavavuniya@gmail.com |

## 021-2285915

**பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி, இலங்கை மத்திய வங்கி, அறிவியல் நகர், கிளிநொச்சி**

**தொலைநகல் : 021-2285911 மின்னஞ்சல் : helpnp@cbsl.lk**

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம் அரச மற்றும் வங்கி விடுமுறை தவிர்ந்த வாரம் ஐந்து நாட்களும் மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.15 மணிவரை திறந்திருக்கும்.

(சி-184)

# தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்


(படங்கள் : உ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வடமாகாண அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளருமான சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன்,செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்டவர்கள் மற்றும் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (இ-4)

# தேர்தலில் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணத்தை கண்டறிந்துள்ளோம்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கடந்த உள்ளூராட்சி தேர்தலில் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணத்தை கண்டறிந்துள்ளோம். அவற்றை எதிர்காலத்தில் திருத்திக் கொண்டு செயற்படவுள்ளதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு, கிழக்கில் மொத்தம் 60 சபைகளில் 40 சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது.

நடைபெற்று முடிந்த தேர்தல் முறைமை வட்டார மற்றும் விகிதாசார முறையில் நடைபெற்றுள்ளது.

இந்த தேர்தல் முறைமை இனி இருக்காது என்று எண்ணுகின்றோம். இந்த தேர்தல் முறைமையில் நாங்கள் பெரும்பான்மையில் வெற்றி பெற்றாலும், குறைந்த வாக்குகளை பெற்றவர்களும் சபைகளில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

முன்னதாக இந்த தேர்தலை 60 வீதம் வட்டாரத்திலும் 40 வீதம் விகிதாசாரத்திலும் நடத்துவதற்கு தீர்மானித்திருந்தனர். இதன் அடிப்படையில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இந்த தேர்தல் முறைமைக்கு ஆதரவுவழங்கினோம் ஆனால் தேர்தல் முடிவுகள் தற்போது திருப்திகரமாக இல்லை. சிறிய எண்ணிக்கை கொண்ட இனங்கள் மற்றும் கட்சிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தென்னிலங்கையில் இந்த தேர்தல் முறைமை பாதகமாக அமைந்திருந்தது. எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தல் வட்டாரம் மற்றும் விகிதாசாரத்தில் 50: 50 என்ற முறையில் நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

எனினும் அவ்வாறு நடைபெறாது. அதற்கு நாங்களும் சிறுபான்மை இனங்களை கொண்ட கட்சிகளும் ஆதரவு வழங்க போவதில்லை. இந்த தேர்தல் முறையால் மலையக கட்சிகள் கூட நன்மையை பெற்றுக்கொள்ளவில்லை.

அதிகப்படியான கட்சி உறுப்பினர்கள் ஒரு சபைத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருப்பதனால், நல்லிணக்கத்துடன் சபையை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. போரால் அழிந்த தேசத்தை மீளக் கட்டியெழுப்பும்பாரிய பொறுப்பு இந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கு தான் இருக்கின்றன.

ஆகவே அதனை சிந்தித்து அனைவரும் செயற்பட வேண்டும். இதுதவிர சுயாதீனமாகவும் கட்சிக்கு எதிராக செயற்பட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

இந்த தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஏற்பட்ட வாக்கு வீழ்ச்சிக்கான காரணத்தை கண்டறிந்துள்ளோம். எதிர்காலத்தில் அவற்றை திருத்தி செயற்படவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வயற்காணி பதிவேடுகள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

அம்பன் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட செம்பியன்பற்று தெற்கு ஜே/427, மருதங்கேணி ஜே/428, ஆழியவளை ஜே/431, முள்ளியான் ஜே/433 (நித்தியவெட்டை) ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் வயற்காணி பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு மக்களின் பார்வைக்கு 21.03.2018 புதன்கிழமை முதல் 06.04.2018 வரை வைக்கப்படும். இதனை இப்பிரதேச மக்கள் பார்வையிட்டு சீர்செய்து கொள்ளலாம் என அம்பன் கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (இ-60)

## தகவல் தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

15.03.2018 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதி-10 இல் அனுமதிக்கப்பட்ட நோயாளியான எஸ்.பரமானந்தம் (வயது-63) எனும் முதியவர் 17.03.2018 ஆம் திகதிலிருந்து முறையான அனுமதியின்றி வைத்தியசாலையின் விடுதியினை விட்டு வெளியேறியுள்ளார்.

இவர் சிவபூமி முதியோர் இல்லத்தினை சேர்ந்தவராவார். அத்துடன் இவர் உரையாடுவதற்கு சிரமப்படுவதுடன் சில வேளையில் அசாதாரண நடத்தை செயற்பாடும் உடையவர் ஆவார்.

இவரைப்பற்றிய தகவல்களோ அல்லது அடையாளம் கண்டோர் சிவபூமி முதியோர் தொல்புரம் இல்ல நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சிவபூமி தொடர்பு இலக்கம்:- 021 321 4230 என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும். யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தலைமையில் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறும். (இ)


தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விசேட ஒதுக்கீட்டு நிதி மூலம் பெறப்பட்ட 18 மல்லியன் ரூபா பெறுமதியான கட்டடம் அமைப்பதற்குரிய ஆரம்பப் பணிகளை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.




## மூளாய் முருகனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெற்று 31ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (இ-7)

## யோகா புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப்பேரவை கந்தர் மடத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் யோகா புதிய வகுப்புக்களை ஆரம்பிக்கின்றது.

இவ் வகுப்புக்கள் இன்று புதன்கிழமை தொடக்கம் காலை 6 மணி முதல் காலை 7 மணிவரை ஒரு மாதம் தினமும் நடைபெறும்.

மேலும் பல்வேறு நேரங்களிலான யோகா வகுப்புக்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும். ஆர்வமுடைய அனைவரும் யோகா வகுப்புக்களில் இணைந்து பயனடைய முடியும். (இ)

## சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி விரதம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆலய குரு சிவஸ்ரீ துவிவேகானந்தக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். (இ)



றோட்டறக்ட் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகத்தினால் யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு கடந்த 16 ஆம் திகதி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# பலி மற்றும் பழிவாங்கல்களுடன் பயணிக்கும் பாதாள உலகக்குழு

## தலை வெட்டப்பட்டமை, துப்பாக்கிச் சூடு ஆகியவற்றுக்கான உண்மைக்காரணங்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நிழல் உலகக்குழுவினருக்கிடையே இடம்பெற்ற மோதல்களில் எண்மர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாத்திரம் ஆமர் வீதி மற்றும் அத்துருகிரிய பிரதேசங்களில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு உயிரிழந்தவர்களில் ஒருவர் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

அத்துருகிரிய கல்சாவ வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு ஆமர் வீதியில் இடம்பெற்ற சம்பவத்தில் மேலும்ஒருவர்காயமடைந்தார்.

அத்துருகிரியவில் மரணித்தவர் வாழைத்தோட்ட பகுதியில் மீட்கப்பட்ட தலைக்குரிய நபருக்கு மிகவும் நெருக்கமானவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் மாகந்துர மாதுஸ் இன் உதவியாளர்கள் செயற்பட்டுள்ளனர் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆமர் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோக சம்பவமானது நிழல் உலகக் குழுவினருக்கிடையில் இடம்பெற்ற கொடுக்கல்-வாங்கல்களின் பிரதிபலனாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 11 வருடங்களாக சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்த தெமட்டகொடை பிரதேசத்தினைச் சேர்ந்த அந்தோணிராஜ் என்ற 42 வயது நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தனது மனைவியுடன் காரில் பயணித்த போது அவர்கள் மீது நேற்று முன்தினம் முற்பகல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதோடு, சம்பவத்தில் குறித்த நபர் பாரிய காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

எனினும் காயமடைந்த அவரது மனைவி தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை குண்டுத் தாக்குதலினால்உயிரிழந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிற்கு ஆமர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள உருவச்சிலையிலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவிலேயே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தின் நடப்புகள் அருகிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

இதனுடன் கொழும்பு வாழைத்தோட்ட பகுதியில் அண்மையில் பொதி செய்யப்பட்ட நிலையில் நபர் ஒருவரின் தலை மாத்திரம் மீட்கப்பட்டது.

பின்னர் குறித்த தலையானது பாதாள குழுவொன்றின் உறுப்பினரான கொஸ்மல்லி என்பவரின் தலையென இனங்காணப்பட்டது.

பின்னர் நேற்று முன்தினம் அவரது முண்டம் அம்பாந்தோட்டை அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் எரியூட்டப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற மாகந்துர மாதுஷ் என்பவருக்கு நெங்கியவரான மொஹமட் ரிஸான் என்பவர் துப்பாக்கி பிரயோகத்தினால் கொலை செய்யப்பட்டமைக்கான பிரதிபலனே கொஸ்மல்லியின் கொலைச் சம்பவமாக அரங்கேறியுள்ளது.

கொலை செய்யப்பட்ட கொஸ் மல்லி பிரபல பாதாள உலக குழுவின் தலைவர் சமயங் என்பவரின் உதவியாளர் என தெரியவந்துள்ளது.

இந்த வருடத்தின் கடந்த 3 மாதங்களில் கொழும்பு கிராண்ட்பாஸ், தலங்கம, பொறளை, வத்தளை, கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் அறுவர் பலியாகினர்.

அத்துடன் வெளிநாட்டிற்கு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படும் பாதாள குழு உறுப்பினர் மாகந்துர மாதுஷ் உம் கொலை செய்யப்பட்டுள்ள சமயங் ஆகியோரின் உதவியாளர்களுக்கிடையே இடம்பெற்ற மோதல்களின் விளைவே, தற்போதைய பழிவாங்கல்களின் பின்னணியாகும் என பொலிஸ்சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)


### மணமகள் தேவை

இத்தாலியில் வசிக்கும் நுணாவிலைச் சேர்ந்த 1984ஆம் ஆண்டு ரேவதி மீன ராசியில் பிறந்த 7இல் செவ்வாய் (8புள்ளி) கொண்ட எனது மகனுக்கு மணமகள் தேவை. (3297)

தொடர்பு: 077 636 5786



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984RC<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8389 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 64 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6841 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Eng/ பொறியியலாளர் டுபாய்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/8390 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: G/6842 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/8391 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: NDT/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6858 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 27 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/8392 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: சூரி செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/6860 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

## ஏல விற்பனை

எமது கல்வி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 28.03.2018 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

**01.** Computer set.
**02.** Printers.
**03.** Photocopier.
**04.** உடைந்த தளபாடங்கள்.
**05.** பாவித்த வாகன ரயர்கள்.
**06.** ஏனைய சிறு அலுவலக உபகரணங்கள்.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

(சி-1939)



## கனடாவில் கல்வி, தொழில் மற்றும் வாழ்வு

SIBM நிறுவனம் இரண்டாவது முறையாகவும் வெற்றிகரமாக நடாத்தும்
கனேடிய முன்-பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டம்
(ஒன்டாரியோ கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது)
(உடனடி நேர்முகத் தேர்வு மற்றும் தெரிவு)

குறைந்த கல்வித் தகுதி: க.பொ.த சாதாரண தர அல்லது அதற்கு இணையானது
வயதெல்லை: 17வயது முதல் 30 வயது வரை
விசேட சலுகைகள்: IELTSதேவையில்லை /உள்நாட்டு அறவீடுகள் இல்லை
திகதி மற்றும் நேரம் : 22-23.03.2018/
காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

எங்களது கருத்தரங்கின் போது உங்களது சுயவிபரக் கோவை, பிறப்புச் சான்றிதழ் (ஆங்கிலமொழி) கடவுச் சீட்டையும் நீங்கள் சாதாரண பரீட்சையிலோ அல்லது உயர்தரப் பரீட்சையிலோ சித்தியடைந்திருப்பின் அதன் சான்றிதழ்களையும் வேறு உயர் சான்றிதழ்கள் இருப்பின் எடுத்துக் கொண்டு வரவும்

இடம் :
கிரின்கிராஸ் ஹொட்டல் (யாழ்ப்பாணம்)
மேலதிக விபரங்களுக்கு: SIBM தனியார் கல்வி நிறுவனம்128 ஹைலெவல் வீதி, நுகேகொடை, இலங்கை.

T: 0113 370 397 H: 077 393 1931
e: study@sibm.edu.lk W: www.sibm.edu.lk



## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வ-து) வட்டுக்கோட்டை

**ஆரம்பம்: 1957** **பதிவு இல: S154**

மக்கள் சேவையில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த எமது நிறுவனம் தனது 62 ஆவது சேவை வருடத்தில் தமது அங்கத்துவப் புத்தகங்களை மற்றும் ஆதாரங்களை இழந்து தவிக்கும் எமது நிறுவன அங்கத்தவர்களுக்கு உதவும் வகையில் விசேட கொடுப்பனவுத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

எவ்வித ஆதாரங்களும் இன்றி அல்லலுறும் அங்கத்தவர்கள் துயர் போக்க அவர்கள் அங்கத்துவம் பெற்ற வருடம், அங்கத்துவப் பணம் கட்டிய காலம் போன்ற விபரங்களை கூடுமானவரை சேகரித்து எம்மிடம் கோரிக்கை விடும் பட்சத்தில் கட்டிய பணத்தை மேலதிகக் கொடுப்பனவுடன் வழங்க எண்ணியுள்ளோம்.

கோரிக்கை விடும் பத்திரம் ரூபா ஐம்பது முத்திரை ஒட்டப்பட்டு சமாதான நீதவான் முன்பு கையொப்பமிட்டு அவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பத்திரத்தில் உங்களைப் பற்றிய விபரம் சேர்த்து பணம் கட்டிய காலம் ஏறக்குறைய கட்டிய பணம் என்பன குறித்து சத்தியப் பத்திரத்தை எம்மிடம் சமர்ப்பித்தால் அவற்றில் காணும் சாதக பாதகங்களை சீர்தூக்கி ஆராய்ந்து உண்மை நிலையை வெளிக்கொணர்ந்து சங்க சட்ட ரீதியாகவும் மனிதநேய அடிப்படையிலும் செயற்பட ஆலோசிக்கின்றோம்.

போர் முதலான இடப் பெயர்ச்சிகளால் அங்கத்துவப் புத்தகங்களை தவறவிட்ட அங்கத்தவர்களின் வழிகாட்டலிற்காகவே இவ் விளம்பர ஏற்பாடு.

இந்துக் கல்லூரியடி, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.
தொ.இல: 077 149 5631

இ.ஆனந்தராசா, நிர்வாக செயலாளர்.

(3284)

# கிளி.மாவட்டம் வறுமை நிலைக்கு செல்வதற்கு வரட்சியே காரணம்

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டம் வறுமை நிலைக்குச் செல்வதற்கு வரட்சியே காரணமாக அமைந்துள்ளது என மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி இரணை மடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச் செய்கைக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், பயிர்ச் செய்கை தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களையும் சட்டதிட்டங்களையும் எல்லோரும் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். இதற்கு முரணாக ஏதேனும் செயற்பாடுகள் இடம்பெறுமாயின் அதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

காலநிலை பற்றி ஊகத்தில் எதனையும் சொல்ல முடியாது. குளத்தின் நீர்மட்டத்தையும் எதிர்காலச் செயற்பாடுகளையும் அடிப்படையாகக்கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும் உபவுணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் உபவுணவுச் செய்கை முன்னுரிமைப்படுத்தப்பட்டு இதனை பயிரிட அதிகளவான விவசாயிகள் முன்வர வேண்டும்.

குறிப்பாக, நெற்செய்கை மட்டும் அல்லாது சிறுதானியச்செய்கை, கால்நடை வளர்ப்பு, வரட்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இப்பயிர்ச்செய்கை தீர்மானிக்கப்பட்டு நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதி உச்ச பயனை அடையவேண்டும்.

எமது மாவட்டம் வறுமை நிலைக்குச் செல்வதற்கு முக்கிய காரணம் இரணைமடுக் குளத்தில் தண்ணீர் இன்மையால் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் செய்கை பண்ணப்படாமல்போனது மற்றும் நன்னீர் மீன்பிடி பாதிப்பு, கூலித் தொழிலாளர் பாதிக்கப்பட்டிருப்பது எனப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எமது மாவட்டம் விவசாயத்தில் தங்கியுள்ளதனால் வரட்சி காரணமாக வறுமை நிலைக்குச் சென்றிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# நடமாடும் விற்பனை நிலையத்தில் பழுதடைந்த உணவுகள் கைப்பற்று

(பனிக்கன்குளம்)

வவுனியா புகையிரத வீதியில் அமைந்துள்ள அரச வங்கிக்கு அருகாமையிலுள்ள நடமாடும் விற்பனை நிலையத்தினை சுகாதாரப் பிரிவினர் சுற்றிவளைத்து பரிசோதனை மேற்கொண்ட வேளை சுகாதாரச் சீர்கேடான உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டு குறித்த விற்பனை நிலையத்தின் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பரிசோதனை நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் பழுதடைந்த மீன் போன்றவற்றை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (2-281)

# மயக்கமடைந்த வயோதிபரை உறவினர்களிடம் ஒப்படைத்த பொலிஸாருக்கு மக்கள் பாராட்டு



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதி வீதியில் மயக்கமடைந்த நிலையில் இருந்த வயோதிபர் ஒருவரை பொலிஸார் மீட்டெடுத்து உறவினர்களிடம் ஒப்படைத்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதி வீதியில் அநாதரவற்ற நிலையில் வயோதிபர் ஒருவர் வீதியில் மயக்கமடைந்த நிலையில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வவுனியா நெளுக்குளம் பொலிஸார் பிரஸ்தாப வயோதிபரைத் தூக்கி அவருக்கு குடிப்பதற்கு நீர் வழங்கியதுடன் அவரின் உறவிர்களின் விபரங்கள் தொடர்பாக கேட்டறிந்து தமது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று அவருடைய இடமான பண்டாரிக்குளம் பாடசாலைக்கு அருகிலுள்ள அவரது வீட்டில் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதையடுத்து அப்பகுதி மக்கள் நெளுக்குளம் பொலிஸாரின் மனிதாபிமான செயற்பாட்டையும் சேவையையும் பாராட்டினர். (2-286)

# கவனமாக செயலாற்றுங்கள்

## மகிந்த அறிவுரை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்காக தெரிவான உறுப் பினர்களின் பதவிக்காலம் நேற்று முதல் ஆரம்பமானது.

50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களிலிருந்து மாநகர முதல்வர்கள் மற்றும் நகர சபை தலைவர்கள் ஆகி யோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

50 சதவீதத்திற்கும் குறை வான வாக்குகளை பெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் முதலாவது அமர்வின் போது தலைவர்கள், பிரதித் தலைவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

குறித்த அமர்வு ஆரம்பமாகும் திகதி குறித்து உள்ளூராட்சி மன்ற ஆணையாளரி னால் தற்போதைய நிலை யில் அறிவிக்கப்பட்டுள்ளது.

340 உள்ளூராட்சி மன் றங் களுக்கான நிர்வாக காலம் நேற்று ஆரம்பமாகியது.

கடந்த பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூரா ட்சி மன்றத் தேர்தலின் ஊடாக, 8 ஆயிரத்து 356 உறுப்பினர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் உள்ளூராட்சி மன் றங்களுக்கு தெரிவான சிலர் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னி லையில் இந்த சத்தியப்பிர மாணங்கள் இடம் பெற்றன.

சத்தியப்பிர மாண த்திற்கு பின்னர் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, தாம், உறுப் பினர்கள் தொடர்பில் அவதானமாக இருப்பதாகவும் அது தொடர்பில் கவனமாக செயலாற்று மாறும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கி தொடர்பில் விளக்கமளித்த கசுன்



தனியார் பேருந்து சாரதியை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள தென் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.கசுன் நேற்று மாகாண சபை அமர்வில் பங்கேற்றார்.

அவர் சிறைச்சாலை பாதுகாவலர்களின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அமர்வில் பங்கு கொண்டார்.

காலை 9.30 அளவில் ஆரம்பமான சபை அமர்வில் பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததைத் தொடர்ந்து எம்.கே கசுன் உரையாற்றினார்.

கைது செய்யப்பட்டுள்ள தமக்கும் தமது மனைவிக்கும் நியாயம் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தார்.

2003 ஆம் ஆண்டு கொழும்பின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து தமது தந்தையான எம்.கே ரஞ்சித்தின் கொலை இடம்பெற்ற வேளையில் ஒருவரும் அவரது அருகில் இல்லாமை அவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்ததாக சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் தனது பாதுகாப்பின் பொருட்டே மனைவி முன்னிலையானதாக அவர் விளக்கமளித்தார். (இ-7)

# மோட்டார் குண்டு மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் தென்னம்பிள்ளைக்கு கிடங்கு வெட்டிய போது மோட்டார் குண்டு ஒன்று தென்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்படி பகுதியில் தென்னம்பிள்ளைக்கு கிடங்கு வெட்டிய போது மோட்டார் குண்டு ஒன்றின் காற்றாடி தென்பட்டதையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டதுடன் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அப் பகுதியில் மேலும் வெடிபொருட்கள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-60)

# குளங்களை புனரமைத்துத்தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மக்களில் 61 வீதமான மக்களின் வாழ்வாதாரத்தொழிலாக விவசாயம் காணப்படுவதனால் விவசாயக்குளங்களை புனரமைத்துத்தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மக்கள் தொகையில் அறுபத்தொரு வீதமான மக்கள் விவசாயத்தையும் 17வீத்மான மக்கள் மீன்பிடியையும் 22 வீதமான மக்கள் ஏனைய தொழில்களையும் தமது வாழ்வாதாரத்தொழிலாகக் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்டத்தில் காணப்படுகின்ற பாரிய நீர்ப்பாசனக் குளங்களான முத்துஐயன் கட்டுக்குளம், வவுனிக்குளம், உடையார்கட்டுக்குளம், தண்ணீர் முறிப்புக்குளம் போன்ற பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதும் இக் குளங்களின் கீழ் மேலும் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கவேண்டிய நிலையில் காணப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ள விவசாய அமைப்புக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழுகின்ற மக்க ளின் வாழ்வாதாரமாக அமை ந்திருக்கின்ற மூன்று பாரிய குள ங்களையும் 17 நடுத்தரக் குளங்களும் இதனை விட 228 இற்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் காணப்படுகின்றன.

இவற்றின் கட்டுமானங்களை உரிய முறையில் முன்னெடுத்து எதிர்காலத்தில் விவசாயச் செய்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன. (2-315)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கடலட்டைகள் இந்தியாவில் பறிமுதல்

## ஒரு கோடி மதிப்புடையது எனத் தகவல்

(மண்டபம்)

இலங்கைக்கு கடத்தவிருந்த ஒரு கோடி ரூபா மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் சுங்கத்துறையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மண்டபத்தை அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்திச் செல்ல கடலட்டைகள் கொண்டு செல்லப்படுவதாக சுங்கத் துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்து சுங்கத் துறையினர் வேதாளை கடற்கரையை சுற்றி வளைத்து சோதனைமேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் படகு ஒன்றில் கடல் அட்டை மூடைகள் ஏற்றப்பட்டது தெரிய வந்ததையடுத்து அந்த படகை சுற்றிவளைத்து கடல் அட்டைமூடைகளையும், படகையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட மூடைகளை சோதனை செய்தபோது அவற்றில் 500 கிலோ கடல் அட்டைகள் அவை பதப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தது தெரிய வந்தது.

பறிமுதல் செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளின் சர்வதேச மதிப்பு ரூபாய் ஒரு கோடி என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் கடத்தலில் ஈடுபட்டு தப்பி ஓடியவர்களை தேடும் பணியில் சுங்கத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். (இ-9)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு பிரதேச செயலக த்திற்குட்பட்ட கொக்குத்தொடு வாய் அரசினர் தமிழ் கல வன் பாடசாலை மாணவர்க ளுக்கு ஐந்து புதிய துவிச்சக் கர வண்டிகள் மற்றும் ஒரு தொகை கற்றல் உபகரணங் கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அண் மையில் அன்பளிப்பாக வழ ங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் வட்டுக்கோ ட்டை இந்து வாலிபர் சங்க முன்னாள் உறுப்பினர் க.மயூ ரன்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க ஆலோசகர் விஸ்வலிங்கம் சச்சிதானந் தன், பாரதி இல்லநிர்வாகி மகே ஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக் கான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் கற்றல் உபகரணங் களை வழங்கினர். இதற் கான நிதி அனுசரணையை புலம்பெயர் அமைப்பான ஜேர்மனியைச் சேர்ந்த தமிழர் கலாசார வட்டம் கயில்புறோன் வழங்கியிருந்தனர். (2)




## தெய்வீக தொடர் இசைப் பேருரை

தலைமன்னார் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் திரு விழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். .

இந்நிகழ்வில் தினமும் ஆலய முன்றலில் பிற்பகல் 7 மணிக்கு நல்லைக் குருமணி யின் பிரதமவாரிசு கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'மகாபாரதம்' பற்றிய தெய் வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (2)

## இரணைமடுக்குள நீரைப் பயன்படுத்தி

# ஆயிரத்து 812 ஏக்கரில் நெற்செய்கை; 300 ஏக்கரில் சிறுதானியச் செய்கை

### சிறுபோகச்செய்கை இறுதிக் கூட்டத்தில் தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணை மடுக்குளத்தின் நீரைப் பயன் படுத்தி இவ்வாண்டு ஆயிர த்து 812 ஏக்கரில் நெற் செய் கையும் 300 ஏக்கரில் சிறு தானியச் செய்கையும் மேற் கொள்ளப்படவுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.





இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கை தொடர்பான இறுதிக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசா ங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி மாவட்டத் தில் நிலவுகின்ற வரட்சி கார ணமாக பெரிய மற்றும் நடுத் தர சிறிய குளங்களின் நீர்மட் டம் குறைவாகக் காணப்படு வதுடன், சில குளங்கள் நீர் வற்றிக்காணப்படுகின்றன.

இந்நிலையில் கிளிநொ ச்சி மாவட்டத்தின் இரணை மடுக்குளம், புதுமுறிப்புக் குளம் ஆகியவற்றிலிருக் கின்ற நீரைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் சிறுபோகச்செய்கை மேற் கொள்ளக்கூடிய நிலை காணப்படுகின்றது.

36அடி நீர்கொள்ளள வைக்கொண்ட கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 16 அடி மூன்று அங் குலமாகக் காணப்படுகின்றது.

இதில் பத்து அடி வரை யான தண்ணீரை குளத்தின் பாதுகாப்புக் கருதி தேக்கி வைப்பது எனவும் ஏனைய நீரைப்பயன்படுத்தி சிறுபோ கச் செய்கை மேற்கொள்வ தாக தீர்மானங்கள் ஏற்க னவே நடைபெற்ற ஆலோச னைக்கூட்டத்தில் எடுக்கப்பட் டன.

இதனையடுத்து இரணை மடுக்குளத்தின் கீழான சிறு போகச் செய்கை தொடர்பான இறுதிக்கூட்டம் மாவட்ட அர சாங்க அதிபர் சுந்தரம் அரு மைநாயகம் தலைமையில் நேற்று கிளிநொச்சி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆயிரத்து 812 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 300 ஏக்க ரில் சிறுதானியச் செய்கை யுமாக இரண்டாயிரத்து 112 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதென்றும் தீர மானிக்கப்பட்டது. அத்துடன் வாய்க்கால் துப்புரவுக்கான இறுதித்திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி என்றும் இறுதி விதைப்புத் திகதியாக 30. 03.2018 எனவும் முதலா வது நீர் விநியோகத்திகதி 01.04.2018 எனவும் தீர்மா னிக்கப்பட்டது. மேலும் மூன்று, மூன்றரை மாத நெல் பயிரி டுவதென்றும் தீர்மானிக் கப்பட்டது. இதில் இரணை மடு விவசாய அமைப்புக் களின் பிரதிநிதிகள், நீர்ப்பா சனத் திணைக்கள அதிகா ரிகள், விவசாயத் திணை க்கள அதிகாரிகள் எனப்பலர் கலந்த கொண்டு இக் கூட்டத் தில் நீரைச்சிக்கனமாகவும் நேர்த்தியாகவும் பயன்படுத்தி வெற்றிகரமான விவசாயச் செய்கையை மேற்கொள்வ தென்றும் தீர்மானிக்கப்பட் டுள்ளது. (2-315)

# அளம்பில் மாவீரர் துயிலுமில்ல காணியை அபகரிப்பதற்கு இராணுவம் கடும் முயற்சி

(பனிக்கன்குளம்)

வன்னியில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தில் வீரச்சா வைத் தழுவிய மாவீரர்க ளின் வித்துடல்கள் விதைக் கப்பட்ட இடங்களில் ஒன்றா கிய முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லம் அமை ந்திருந்த காணியில் ஒரு பகு தியை நிரந்தரமாக இராணு வம்கையகப்படுத்த முயல்வதா கவும் இதனை இராணுவத் துக்கு வழங்க முடியாது என வும் பலரும் எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர்.



தமது உறவுகளை நினை ந்து வருடத்தில் ஒரு முறையே னும் தாம்கண்ணீர்விட்டுஅழுது தமது சோகங்களை ஆற்று வதாகவும் அதற்கு அனுமதி க்காது எமது துயிலுமில்ல காணியில் பப்பாசி செய்கை செய்வதோடு தேநீர்ச்சாலை ஒன்றையும்நடத்திவருகின்றனர்.

தற்போது இந்த இடத்தின் ஒரு பகுதியை நிரந்தரமாக அபகரித்து நிரந்தரமாக இரா ணுவ முகாம் அமைக்க முயல் வது வேதனை அளிப்பதா கவும் இந்த காணியை இரா ணுவத்துக்கு வழங்காது சம் பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் மாவீரர்களின் பெற் றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த விட யம்தொடர்பில்வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனி டம் தொடர்பு கொண்டு வின வியபோது, அளம்பில் பகுதி யில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணியை சுவீகரிப்பதற்கான நடவடி க்கை மேற்கொள்ளப்படுவ தாக தெரிவிக்கப்படுகின்றது. இருந்தும் பிரதேச மக்களிடம் நான் தொடர்பு கொண்டு கேட்டபோது சில இடங்களில் சுவீகரிப்பின் நடவடிக்கைக் கான அறிவிப்பு ஒட்டப்பட் டிருப்பதாகவும் அறியமுடி கின்றது.

இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று. மாவீரர்கள் என்று ஒவ்வொருதரும் தங் கள் உறவுகளை பறிகொடுத்த அனைவரும் அந்த துயிலும் இல்லத்தில் ஆண்டில் ஒரு தடவை கண்ணீர்விட்டு கதறி அழுது தங்கள் மனவேத னையினை போக்கும் நாளாக காணப்படுகின்றது.

படையினர் வரலாற்று இடங்களில் தங்களின் ஆதிக் கத்தை செலுத்தும் முனைப் புடன் ஈடுபட்டு வருகின்றா ர்கள். மாவீரர் துயிலும் இல்ல ங்கள் அமைந்துள்ள காணி களை விட்டு படையினர் வெளியேறவேண்டும். சுவீக ரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. இது மக்களின் உதிரத்தோடு இருக்கும் காணி கள். இது மீறும் பட்சத்தில் இது மக்களால் ஏற்றுக்கொள் ளப்படமுடியாமல் இதற்கான விளைவுகளை பொறுப்பெ டுக்கவேண்டிய நிலை சம் மந்தப்பட்டவர்களுக்கு ஏற்ப டும் என்பதனையும் தெரி வித்துக்கொள்கின்றேன் என எச்சரித்துள்ளார். (2-281)

## எமது சொந்த இடங்களில் இன்றுவரை குடியேற முடியாத நிலையில் வாழ்கின்றோம்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

எமது சொந்த இடங்களில் இன்னும் குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது என வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந் தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சுந்தரபுரம் அர சினர் தமிழ் கலவன் பாடசா லையின் வெள்ளிவிழா நிக ழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்விச்சமூகம் சார்ந்த வர்களும் மக்கள் பிரதி நிதிகளாக இருக்கின்றவர்க ளுக்கும் பாரிய பொறுப்பு ஒன்றுள்ளது. ஆகவே நாங்கள் அனைவரும் இணை ந்து எங்கள் சமூகத்தை, இன த்தை முன்மாதிரியாக கொண்டு வழிகாட்ட வேண் டியது அல்லது இந்த சமூகத்திற் கான ஒரு விழிப்புணர்வை ஏற் படுத்த வேண்டிய பாரிய பொறு ப்பு எமக்கு இருக்கின்றது.

இன்றைய காலத்திலே போருக்கு பின்னர் கல்வி அபிவிருத்தியையும் தாண்டி எம் மக்கள் சமூகத்தில் கற்க வேண்டிய விடயங்கள், அனுப வங்கள் நிறைய இருக்கின் றன. அந்த அனுபவங்களை கற்றுக்கொண்டால் மாத்திரம் தான் இந்த கல்வியின் ஊடாக மட்டுமே எமது மொழியை யும், இனத்தையும் எமது பிரதேசத்தையும் பாதுகாத் துக்கொள்ள முடியும். வடக்கு, கிழக்கில் கல்வி கற்றுக் கொண் டிருக்கின்ற ஆயிரக்க ணக் கான மாணவர்கள், மத்தி யில் பலருக்கு தாய், தந்தை அல்லது இருவருமே இல் லாத நிலை காணப்படுகின் றது. ஆகவே இந்த நிலைமை கள் மாற்றப்பட வேண்டும்.

வவுனியா ,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில்மூன்று இலட்சத்து அறுபதாயிரம் தமிழ் மக்களுக்கு சொந்த மான காணி மகாவலி கங்கை தன்வசம் வைத்துக் கொண் டிருக்கின்றது. எங்களுடைய மக்கள் அந்த காணிக்கு எந்தவிதமான ஆவணங் களை வைத்திருந்தாலும் அதற்கு மகாவலி அபிவி ருத்தி சபையினரே அதற்கு சொந்தக்காரர்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையில் தான் எமது இனம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே இதில் இருந்து நாம் மீண்டு எழ வேண்டும் என்றால் அதற்கு ஒரே தீர்வு கல்வி ஒன்று மட்டுமே. (2-250)

# சிறுபான்மை சமூகம் தாக்கப்படும் போது பெரும்பான்மை சமூகம் இரசிக்கிறது!

## மகிந்த தேசப்பிரிய கடும் விசனம்

(கொழும்பு)

கண்டி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அண்மையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கும் வணக்கஸ்தலங்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டமை, பெரும்பாலான சிங்களவர்களுக்கு மகிழ்ச்சியையே ஏற்படுத்தியுள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய விமர்சித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு பெரும்பாலான சிங்களவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்பட்டது. எனினும், அதில் எவ்வித உண்மையும் இல்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்விடயத்தைக் தெரிவித்தார்.



. கடந்த 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் போதும் பெருமளவான சிங்களவர்கள் மகிழ்ச்சியுற்றதாக மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அரேபிய கலாசாரத்தை சில முஸ்லிம்கள் பின்பற்றுவதால் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்திற்குள் அவர்கள் தள்ளப்படுவதாகவும் அத்தோடு, முஸ்லிம்களால் நடத்தப்படும் சிறு பாடசாலைகளுக்கே முஸ்லிம் பெண் பிள்ளைகள் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இவ் விடயங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூகம் சிந்தித்து, உண்மையை உணர்ந்து, இலங்கை தேசத்திற்குள் அவர்கள் ஒன்றுபடுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

அதே சந்தர்ப்பத்தில், நாட்டிலோ உலகத்திலோ கலப்பின்றி தனியாக எந்தவொரு சமூகமும் இல்லையென்பதை சிங்களவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புவதாகவும் மகிந்த தேசப்பிரிய கூறினார்.

அத்தோடு, இந்தியாவிலிருந்து கஜபாகு மன்னனால் அழைத்துவரப்பட்ட யாராவது தற்போதும் உள்ளீர்களா என்று சிங்களவர்களிடம் கேள்வியெழுப்புவதாக குறிப்பிட்ட மகிந்த தேசப்பிரிய, பௌத்த பிக்குகளை கல்வி போதிப்பதற்காக முஸ்லிம் கல்வி நிறுவனங்கள் அனுமதிக்குமா? என்றும் கேள்வியெழுப்பினார். (இ-7)

## மகிந்த ஆட்சியில் பலமற்றிருந்தோம்

### முதல்வர் ரோஸி சுட்டிக்காட்டு



(கொழும்ப)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் மாநகர சபை ஆட்சி மாத்திரமே எம்மிடமிருந்தது. ஆனால் தற்போது மத்திய- மாநகர ஆட்சிகள் இரண்டுமே எம்மிடமுள்ளதால் பலமாக உள்ளது என கொழும்பு மாநகரசபை முதல்வர் ரோஸி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ரோஸி சேனநாயக்க நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கொழும்பு மாநகரசபை முதல்வராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதனை தொடர்ந்து அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "மூவின மக்களும் ஒற்றுமையாகவும், ஐக்கியத்துடனும் வாழும் கொழும்பு மாநகர சபையில், தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்பி மக்களின் ஒத்துழைப்புடன் மாநகரத்தை அபிவிருத்தி செய்வோம்.

கடந்த காலத்தில் மாநகர ஆட்சி மாத்திரமே எம்மிடமிருந்தது. ஆனால் தற்போது மத்திய- மாநகர ஆட்சிகள் இரண்டுமே எம்மிட முள்ளதால் எமது பலம் அதிகரித்துள்ளது. எமது பலத்தை கொண்டு பலமான கொழும்பு மாநகரத்தை உருவாக்குவோம்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபைக்கு தெரிவான முதல் பெண் முதல்வர் ரோஸி சேனாநாயக்க என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.தே.க.பிரதித் தலைவருக்கு கூடுதல் அதிகாரங்கள் வேண்டும்

### மறுசீரமைப்பு அறிக்கை குறித்து இராஜாங்க அமைச்சர் ருவான்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பதனை பெயரிட வேண்டும் என்பதுடன் பிரதித் தலைவருக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்றும் கட்சியின் பதவிகளுக்கு செயற்றிறன் மிக்கவர்களை அமர்த்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு குழுவின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

எனினும் இந்த அறிக்கையில் பதவி மாற்றங்களுக்கான நபர்களின் பெயர்களை பரிந்துரைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குழுவின் அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.


இந்தக் குழுவின் உறுப்பினர் என்ற வகையில் அறிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியின் மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பித்தோம். இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்று அறிவதற்கு கட்சியினர் பெரும் ஆர்வத்துடன் உள்ளனர். இதன்பிரகாரம் கட்சியின் அடுத்த தலைவர்யார் என்பதனை பெயரிட வேண்டும் என அறிக்கையில் கோரியுள்ளோம்.

மேலும் கட்சியின் பிரதி தலைவருக்கு நாடுபூராகவும் சென்று கட்சியை பலப்படுத்துவதற்கு அதிகளவிலான அதிகாரங்கள் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளோம். மேலும் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். செயற்றிறன் மிக்க தலைவர்களை பதவிகளுக்கு நியமிக்கும் படி அறிக்கையில் பரிந்துரைத்துள்ளோம்.

நாம்வழங்கியஅறிக்கைகளை ஆராய்ந்து பின்னர் செயற்குழு மற்றும் பாராளுமன்ற குழு கூட்டத்தின் போது இறுதி முடிவு எடுக்கப்படும். பெரும்பாலும் இம்மாதத்திற்குள் முக்கிய அறிவிப்பொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 35 இளைஞர்கள் கண் தானம்!




(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்மையம் றோட்டறக்ற் கழகம் மற்றும் கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தினால் இரத்ததானம் மற்றும் கண்தான நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி ஸ்ரீ கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இதில்85பேர்கலந்துகொண்டு குருதிக் கொடையும் 35 பேர் கண் தானத்துக்கான பதிவுகளையும் மேற்கொண்டுள்ளனர். (இ-9)

## வாயு கசிவால் 50பேர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

ஜாஎல பகுதியில் உள்ள தொழிற்சலை ஒன்றில் ஏற்பட்ட வாயு கசிவு காரணமாக 50 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜாஎல, ஏகல பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வாயு கசிவு காரணமாக 25 பேர் கம்பஹா, ஜாஎல மற்றும் ராகம ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று நேற்றும் 25 பேரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மஹேந்திரனை இலங்கைக்கு அழைத்து வரவே முடியாது

### பிரதிபா மஹாநாம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியின் பிரதான சூத்திரதாரியான அர்ஜுன் மஹேந்திரனை இந்நாட்டுக்கு கொண்டுவர முடியவே முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளருமான பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

பிரதமர் அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்த போதாவது, நண்பரே! எமது நாட்டுக்கு வந்து தாங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுச் செல்லுங்கள் என்று அர்ஜுன் மஹேந்திரனிடம் கூறியிருக்கலாம். ஆனால், அதனைக் கூட பிரதமர் செய்யவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமருக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 அம்சங்களில் 13 விடயங்களே மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பிலானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 02

இம்மலையிற் காணப்படும் பனி காலநிலை மாற்றங்களின் தாக்கத்தால் முழுவதும் உருகுவதில்லை. சதா காலமும் பனி இருப்பதால் இது எப்பொழுதும் வெண்மையாகக் காட்சியளிக்கின்றது.

சிவன் கோயில்களில் காணப்படும் ஆலய அமைப்பிலே சிவனுக்கு முன் நந்தி தாபிக்கப்பட்டிருக்கும். அதேமாதிரிக் கயிலாய மலைக்கு முன் ஒரு மலை இயற்கையா கவே நந்தி போன்று அமைந்துள்ளது. கயிலை மலையைச் சிவலிங்கமாகவும் முன் இருக்கும் மலையை நந்தியாகவும் எல்லோரும் வணங்குகிறார்கள்.


சிவலிங்கத்தின் அமைப்பில் இலிங்கமும் ஆவுடையும் கோமுகியும் இருக்கும். அபிஷேகம் செய்யும் போது இலிங்கத்தின் எல்லாப் பக்கங்களாலும் வழியும் நீர் ஆவுடையின் ஒரு பக்கம் வந்து சேர்ந்து கோமுகியால் மட்டும் வெளியே வரும். அதேபோலக் கயிலாய மலையில் இயற்கையாக இலிங்கமும் இயற்கையாக ஆவுடையும் இயற்கையாகக் கோமுகியும் ஒன்றாக அமைந்திருப்பது திருவருளின் வெளிப்பாடே. கயிலையில் இலிங்கமும் ஆவுடையும் தெரியும்.

கயிலாச மலையில் மழையோ பனியோ பெய்யும் போது இயற்கையாக இலிங்கத்தின் எல்லாப் பக்கத்தாலும் வழிந்தோடும் நீர் ஆவுடையின் ஒரு பக்கமாகச் சேர்ந்து கோமுகி காணப்படும் இடத்தால் வெளியே பாய்கிறது.

சிலர் கயிலாச மலையிலே கோயில் இருக்கின்றதா என்று கேட்பார்கள். இல்லை என் பதுதான் சரியான பதில். இங்கு கட்டடங்கள் இல்லை, கருவறை இல்லை, செதுக் கிய விக்கிரகங்கள் இல்லை, மணி இல்லை, குருக்கள் இல்லை, கதவு இல்லை, பூட்டு இல்லை, மலைமட்டும் தான் இருக்கின்றது.

இறைவன் ஆடாது, அசையாது மலையாக, ஞானக் கண்ணுக்குத் தெரியும் தெய்வமாக கயிலாய மலையில் வியாபித்திருக்கின்றார் என் பதுஆதிகாலம்முதற் கொண்டு

**பரமசாமி பஞ்சாட்சரம்**



நம்பப்பட்டு வரும் ஐதீகம். இந்தப் பிர சித்தி பெற்ற இடத்திலே பரம சிவனும் பார்வதி அம்மனும் அருவமாக இருக்கின்றார்கள் என்று நம்பப்படுகின்றது.

இம் மலையின் நடுப் பாகத்திற் சில இடங்களிலே சதுரமாகவும் முக்கோண மாகவும் வட்டமாகவும் காணப்படும். இந்த வடிவங்களுக்குள்ளே பார்த்த பொழுது சிலருக்குச் சிவ பெருமானின் உருவம் தெரிந்ததாகவும் சிலருக்குத் தங்கள் குல தெய்வத்தின் உருவம் தெரிந்ததாகவும் புனிதப் பயணிகள் சொன்னார்கள்.

கயிலையை வலம் வருவது என்பது இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் வலம் வருவது போன்றது என்றும், கயிலையை வலம் வந்தால் ஒருவன் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்றும் இந்துக்களும் பௌத்தர்களும் நம்புகிறார்கள்.

இங்கு அதிகாலைச் சூரியனின் ஒளி கயிலாச மலையிற் பட்டு மலை பொன் நிறமாக மாறும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்கலாம்.

### கயிலாச மலையின் விபரம்

கயிலாச மலை 6.638 மீற்றர் உயரமும் 28.0 கிலோ மீற்றர் சுற்றளவும் கொண்டது. இதைச் சுற்றி எட்டு மலைகள் இருக்கின்றன. இது பூமியின் மத்தியில் இருப்பதாகவும் கயிலாச மலை இருக்கும் இடம் உலகத்தின் ஆன்மீகத் தலங்களின் மையத்தில் இருப்பதாகவும் விக்கிபீடியா (Wikipedia) இணையத் தளத்திற்கூறப்படுகின்றது.

(தொடரும்)

# கொழும்புக் கம்பன் விழா-2018


## 2018 அறக்கட்டளை விருதுகள் பெறுவோர்




"நாவலர் விருது"
சிவ.மகாலிங்கம்



"விபுலாநந்தர் விருது"
ஆர்.புண்ணியமூர்த்தி



"நுழைபுலம் ஆய்வு விருது"
அருணா செல்லத்துரை



"மகரந்தச்சிறகு விருது"
அ.கி.வரதராஜன்



"ஏற்றமிகு இளைஞர் விருது"
சிதாகாஷானந்தா சுவாமிகள்

### இவ்வாண்டுக்கான அறக் கட்டளை விருதுகள் பெறுவோர்:

கம்பன் விழாவில் வருடாந்தம் ஐந்து அறக்கட்டளை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் என்.கருணை ஆனந்தன் நிறுவியுள்ள 'நாவலர் விருதினை' புகழ்பெற்ற அறிஞரான 'சிவத்தமிழ் வித்தகர்' சிவ.மகாலிங்கமும், தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீனிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர் நிறுவியுள்ள 'விபுலாநந்தர் விருதினை' புகழ்பெற்ற தவில் வித்துவான் 'லயஞான சிரோமணி' ஆர்.புண்ணியமூர்த்தியும் அமரர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான் (தமிழ்நாடு) நிறுவிய 'மகரந் தச்சிறகு விருதினை' சிங்கப் பூர் நாட்டின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான அ.கி. வரதராஜனும், புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனின் நினைவாக குடும்பத்தினர் நிறுவியுள்ள 'நுழைபுலம் ஆய்வு விருதினை' மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் அருணா செல்லத்துரையும் புகழ்பெற்ற தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவியுள்ள 'ஏற்றமிகு இளைஞர்' விருதினை சின்மயமிசன் யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் சிதாகாஷானந்த சுவாமிகளும் பெற்றுக் கொள்கின்றனர். கேடயம், பொன்னாடை, ரூபா இருபதாயிரம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடியதாக இவ் விருதுகள் அமைகின்றன.

### இளையோர் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு:

அமரர் துரை.விஸ்வநாதன், அமரர் பொன்.பாலசுந்தரம் அமரர் இலக்கிய வித்தகர் இ.நமசிவாய தேசிகர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, மனனப் போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பரிசில்களும் விழாவின் மூன்றாம் நாளன்று (31.03.2018) மாலை வழங்கப்படவுள்ளன.

### கம்பன் விழா நிகழ்ச்சிகள்:

இவ்வாண்டுக் கம்பன்விழாவில் பட்டிமண்டபம், எழிலுரை, சுழலும் சொற்போர், கவியரங்கம், கோல உரையாடல், விவாத அரங்கம், சிந்தனை அரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### விழாவில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள், அறிஞர்கள்:

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் புலவர் இரெ.சண்முகவடிவேல், புலவர் மா.இராமலிங்கம், பேராசிரியர் மு.இராமச்சந்திரன், 'இலக்கியச்சுடர்' த.இராமலிங்கம், திரைப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார், தமிழக அரசின் கம்பர் விருதாளர் பால இரமணி, பேராசிரியர் ரி.ரெங்கராஜா ஆகிய தலை சிறந்த அறிஞர்களும், இலக்கிய ஆர்வலரும் பிரபல நல்லி புடைவை நிறுவன அதிபரும் சிறந்த கொடையாளருமான நல்லி சின்னசாமி செட்டி, சிங்கப்பூர் கவிஞர்களான இலந்தை சு.ராமசாமி மற்றும் அ.கி.வரதராஜன் ஆகிய பிரமுகர்களும் புதுவைக் கம்பன்கழகம், இராமேஸ்வரம் கம்பன் கழகம், சிங்கப்பூர் கம்பன் கழகம், மலேசிய கண்ணதாசன் அறவாரியம், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், ஆகியவற்றின் உறுப்பினர்களும், நம்நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப் பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள் முதலிய பெரியோர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

### விழாவில் கலந்துகொள்ளும் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்கள்:

கின்னஸ் நூலில் பெயர் பொறித்த உலகப் புகழ்பெற்ற கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணரும் கிளினிகல் குளோபல் வைத்தியசாலை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு இயக்குநரும் இஸ்லாமிய தமிழறிஞருமான டாக்டர் முகமட் ரேலா, குழந்தை சத்திர சிகிச்சை நிபுணரும் கம்ப இலக்கிய நூல்களின் ஆசிரியருமான டாக்டர் பிரியா இராமச்சந்திரனும் இவ்வாண்டு விழாவில் கலந்து கொள்கின்றனர்.

### புத்தகக் கண்காட்சி:

விழா நடைபெறும் நான்கு நாட்களிலும் மண்டப வாயிலில் அகில இலங்கைக் கம்பன்கழகம் மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகியன புத்தகக் கண்காட்சியை நடத்தவுள்ளன. இக் கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியில் புத்தகங்கள் மற்றும் இறுவெட்டுக்கள் விற்பனை செய்யப்படும்.

### ரசிகர்களுக்கு வேண்டுகோள்:

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளதால் ரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மற்றைய தமிழ் ரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவிற்கான அழைப்பினை கம்பன் கழகம் மனமகிழ்வுடன் விடுக்கிறது. (இ-7)

# பாரதம்

## சசிகலாவின் கணவர் நடராஜன் காலமானார்



(சென்னை)

அ.தி.மு.க. அம்மா அணியின் தலைவர் சசிகலாவின் கணவன்எம்நடராஜன்நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தமது 74 ஆவது வயதில் காலமானார்.


கடந்த 16 ஆம் திகதி திடீர் நெஞ்சுவலி காரணமாக பெரும்பாக்கத்திலுள்ள குளோபல் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. நேற்று உடல் நிலை தீவிர மடைந்திருந்த நிலையில், செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 1.30 மணியளவில் அவர் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் பெசன்ட் நகரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

சிறுநீரகம் மற்றும் கல்லீரல் என்பன பாதிக்கப்பட்ட நடராஜனுக்கு கடந்த வருட இறுதிப்பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, மாற்று கல்லீரல் மற்றும் சிறுநீரகம் என்பன பொருத்தப்பட்டன. இதனையடுத்து உடல் நலம் தேறிய நடராஜன், கடந்த வருடம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார்.

இந்நிலையில், கடந்த 16ஆம் திகதி மூச்சுத்திணறல் ஏற்பட்டதோடு, நுரையீரல் தொற்றாலும் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. பெசன்ட் நகரில் வைக்கப்பட்டுள்ள நடராஜனின்உடலுக்குதி.மு.க. செயற்தலைவர் ஸ்டாலின், வீரமணி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் தமிழ் சினிமா பிரபலங்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். (10)

## 'தமிழக அரசியலில் ரஜினிக்கு வெற்றி முகம்': ஸ்ரீகாளஹஸ்தி கோயில் அர்ச்சகர் அருள்வாக்



(ஸ்ரீகாளஹஸ்தி)

தெலுங்கு வருடப் பிறப்பான விளம்பி நாம வருட பஞ்சாங்கம் நேற்று முன்தினம் அனைத்து முக்கிய கோயில்களிலும் வேத பண்டிதர்களால் படிக்கப்பட்டது. இதில் வாயுத்தலமான ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோயிலில் பிரதான குருக்கள் ராமலிங்கேஸ்வர குருக்கள், விளம்பி பஞ்சாங்கத்தை பக்தர்கள் முன் படித்து அதன் பலன்களை கூறினார். அப்போது அவர்,

2019 ஆம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலிலும்பா.ஜ.க. வெற்றி பெற்று மீண்டும்நரேந்திர மோடியே பிரதமர் ஆவ ஆனால், குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், உத்தர பிர சம், ஒடிசா, பீஹார் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.கவின் செல்வாக்கு குறை ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. ஒரு நாடாளும தொகுதிகளிலும் வெற்றி பெறாது. தெலுங்கானாவில் மீண்டும் கே.சந்திரசே ராவே முதல்வர் ஆவார். தமிழக அரசியலில் நடிகர் ரஜினிகாந்துக்கு வெ முகம் உண்டாகும்.இவ்வாறு விளம்பி நாம ஆண்டின் பஞ்சாங்க வாக்கி ராமலிங்கேஸ்வர குருக்கள் வாசித்தார். இத கேட்ட பலர் ஆச்சரியத்துக்குள்ளாயினர்.

தமிழக அரசியலில் புதிய மாற்றம் கொ வரவுள்ளதாக கூறி நடிகர் ரஜினிகாந்தின் சியல் பயணத்திற்கு ரசிகர்கள் மத்தியில் ஏ பித்த வரவேற்பு இருக்கும் நிலையில் அர்ச ரின் அருள் வாக்கால் ரஜினி ரசிகர்கள் மகிழ் ஆரவாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். (

## அரச மரியாதை கொடுக்கும் அளவிற்கு ஸ்ரீதேவி நாட்டிற்கு என்ன செய்தார்

### ராஜ் தாக்கரே கேள்வி



(மும்பை)

நடிகை ஸ்ரீதேவியின் இறுதிச் சடங்கில் மூவர்ணக் கொடி போர்த்தி அரசு மரியாதை கொடுக்கும் அளவிற்கு அவர் நாட்டிற்கு என்ன செய்தார் என ராஜ் தாக்கரே கேள்வி எழுப்பியுள்ளார்.

மராட்டிய மாநிலம் சிவா ஜி பூங்கா அருகே நேற்று முன் தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மகாராஷ்டிர நவ நிர்மாண் சேனா கட்சித் தலைவர் ராஜ் தாக்கரே கலந்து கொண்டு பேசிய அவர், ஸ்ரீதேவியின் இறுதிச் சடங்கில் மூவர்ணக் கொடி போர்த்தி அரசு மரியாதை கொடுத்தால் மூவர்ணக் கொடி, அவரது உடலில் போர்த்தியதாக அரசு விளக்கம் அளித்துள்ளது.



க்கும் அளவிற்கு அவர் நாட்டிற்கு என்ன செய்தார். மக்களை திசைதிருப்பும் வேளையில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. சமீபத்தில் வங்கி மோசடி விவகாரத்தில் நீரவ் மோடி குறித்து சர்ச்சை கிளம்பியது. இதை மக்கள் அதிகம் பேசிக் கொண்டிருந்த வேளையில், ஸ்ரீதேவி மரணம் குறித்த அடுத்த சர்ச்சை உருவானது. இதனால் நிரவ் மோடி விவகாரம் மறக்கடிக்கப்பட்டது. ஸ்ரீதேவி பத்மஸ்ரீ விருது பெற்றவர் என்ப

ஸ்ரீதேவி மிகப்பெரிய நடிகையாக இருக்கலாம். அவர் நாட்டிற்காக என்ன செய்தார் என்று இந்த மரியாதை அளிக்கப்பட்டது என்று ராஜ் தாக்கரே கேள்வி எழுப்பியுள்ளார். (10)

## பெண்கள் பர்தா அணிவது கட்டாயம் இல்லை சவுதி இளவரசர் பின் சல்மான் தெரிவிப்பு

(ரியாத்)

சவுதி அரேபியாவில் பெண்கள் பர்தா மற்றும் முகத்திரை அணிவது கட்டாயமான ஒன்று அல்ல என்று பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், தனியார் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். பர்தா மற்றும் முகத்திரை அணிவது அவர்களது சொந்த விருப்பத்திற்குட்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். இஸ்லாமிய மத கோட்பாடுகளின் படி பெண்கள் ஆண்களுக்கு நிகரான கண்ணியமான உடை அணிய வேண்டும் என்றே அறிவுறுத்தப்பட்டுள்ளது. முழு நீள பர்தாக்களை அணிவதற்கான கட்டாயம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.



பெண்கள்அணிந்துகொள்ள விரும்பும் கண்ணியமான மற்றும் மரியாதையான உடை என்ன வகை என்ற முடிவு முற்றிலும் அவர்கள் எடுக்க வேண்டிய ஒன்று எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். சவுதி அரேபியாவின் சீர்திருத்த நடவடிக்கையில் இறங்கியுள்ள முகமது பின் சல்மான் பெண்களுக்கான சீர்திருத்த நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டி வருவதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும். சவுதி பெண்கள் கார் ஓட்டுவதற்கு அனுமதி அளித்து அமைச்சரவை குழுவுக்கு அறிக்கை அனுப்பியதில் முகமது சல்மானின் பங்கும் முக்கியமானதாகும். மேலும் பெண்களுக்கு சம உரிமை அளிப்பதில், பல் வேறு மாற்றங்களை சவுதி அரசு மேற்கொண்டு வருகிறது.

எனினும் உடைக்கட்டுப்பாட்டில் மாற்றம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்புகள் எதையும் சவுதி அரசு இது வரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## கணவரின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்ள 15 நாட்கள் பரோலில் வெளிவந்தார் சசிகலா

(பெங்களூர்)

கணவர் ம. நடராஜன் உயிரிழந்ததையடுத்து பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவுக்கு 15 நாட்கள் பரோல் வழங்கப்பட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், கணவர் ம. நடராஜன் உயிரிழந்ததையடுத்து, சசிகலா பரோல் கேட்க முடிவு செய்திருந்தார்.

இதன்படி, பெங்களூர் சிறைக் கண்காணிப்பாளரிடம் சசிகலா தரப்பு சட்டத்தரணிகள் பரோல் விண்ணப்பிக்கும் நடைமுறைகளை தொடங்கினர். சசிகலா தரப்பில் 15 நாட்கள் பரோல் கேட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், பெங்களூர் சிறை நிர்வாகம், சசிகலாவுக்கு 15 நாட்கள் வரை பரோல் வழங்கப்பட்டுள்ளது. பரோலில் வெளிவந்த சசிகலா ஊடகங்களுக்குப் பேட்டியளிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (10)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 39 இந்தியர்களும் உயிரோடு இல்லை

### சுஷ்மா அதிர்ச்சித் தகவல்



(டில்லி)

ஈராக்கில் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 39 இந்தியர்கள் உயிரிழந்து விட்டதாக பாராளுமன்றத்தில் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் மொசூல் நகரில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பணயக்கைதிகளாக வைக்கப்பட்டு இருந்த 39 இந்தியர்களும் உயிரிழந்து விட்டதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மொசூல் நகரில் தொழிலாளர்களாக இருந்த இந்தியர்கள், கடந்த 2014 ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர். கடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலானோர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## நாய்கள ... அம்பலம ...

(மொஸ்கோ ...
ரஷ்யாவில் ...
வைத்து இரசா ...
தங்கள் பரிசோ ...
யும் புகைப்பட ...
யானது பரபரப் ...
த்தி உள்ளது. ...
ரஷ்ய உளவா ...
ஸ்கிரிபல் மற்று ...
மகளும் கடந்த ...
chok இரசாய ...
பட்டனர். இதற் ...
வந்தது. இந்நி ...
அருகே இரசாய ...
தற்போது உறுதி ...
கடந்த 1992 ...
இந்த இரகசிய இ ...

## பிரி ... நல் ...

### ஐக்கிய ...

130 மொழி ...
கூடிய கற்றல்தி ...
சிறந்த நல்லாசி ...
கடந்த 2017 ...
அமெரிக்கா, இ ...
ஆசிரியர்களின் ...
கல்விக்காக அ ...
குழுவினர். பி ...
ஸ்பிரக்கோவ்(3 ...
கிரேக்க நாட ...
நாட்டில் உள்ள ...
பகுதியில் அ ...
மற்றும் ஆடைத் ...
சுமார் 130 மொ ...
இங்கு படித்து ...
யாட்டு. இசை ம ...
லின் வாயிலாக ...
பட்டார். ஐக்கிய அ ...
மது பின் ரஷித் ...
உலகின் சிறந்த ...
பரிசையும் ஆ ...

# வெளிநாடு

கம்':
வாக்


# சிரியாவில் அரங்கேறும் கொடூரங்கள்
# பாடசாலை மீது வான்வெளித் தாக்குதல்
## குழந்தைகள் உட்பட 17 பேர் பலி

(டமாஸ்கஸ்)
சிரியாவின் அர்பின் பகுதியில் பாடசாலையில் இடம்பெற்ற வான்வழி தாக்குதலில் 15 பாடசாலை குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியா உள்நாட்டு யுத்தம் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இந்த யுத்தத்தில் இதுவரை 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பல இலட்சம் மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் அர்பின் பகுதியில் உள்ள பாடசாலையை குறிவைத்து நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடைபெற்றது. இதில் 15 குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்ததாக சிரியாவில் செயற்படும் இங்கிலாந்து மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இந்த வான்வழி தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.



குறித்த தாக்குதல் தொடர்பாக இதுவரை சிரியா அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிப்பதில் ரஷ்யாவும் இணைந்து செயற்படுகிறது. இதுபோன்ற தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்.

யுத்த நிலை ஓரளவு குறைவடைந்து வரும் நிலையில் பாடசாலையை குறிவைத்து தாக்குதல் நடத்தியதற்கு சர்வதேச அரசியல் தலைவர்கள் மற்றும் ஐ.நா.சபை பலத்த கண்டனத்தை வெளியிட்டுள்ளது. (10)

ர்அவ
த்தர பிர
குறைட
டாளுமன
சந்திரசே
க்கு வெ
வாக்கின
ர். இதன
னர்.
ம் கொன
ந்தின் ‹
நியில் ஏே
ில் அர்ச்
ள் மகிழ்
ள். (

# நாய்களை வைத்து இரசாயன சோதனை
# அம்பலமானது ரஷ்யாவின் பிறிதொரு முகம்

(மொஸ்கோ)
ரஷ்யாவில் நாய்களை வைத்து இரசாயன ஆயுதங்கள் பரிசோதனை செய்த புகைப்படங்கள் வெளியானது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. முன்னாள் ரஷ்ய உளவாளி செர்கே ஸ்கிரிபல் மற்றும் அவரது மகளும் கடந்த வாரம் Novichok இரசாயன ஆயுதம் மூலம் கொல்லப்பட்டனர். இதற்கு ரஷ்யா மறுப்புத் தெரிவித்திருந்தது. இந்நிலையில் உஸ்பெக்கிஸ்தான் அருகே இரசாயன ஆயுத கிடங்கு இருப்பது அப்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.



கடந்த 1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த இரகசிய இரசாயன ஆயுதக் கிடங்கில் ஆயிரத்திற்கும் அதிகமான நாய்களை வைத்து ரஷ்யா பரிசோதனை செய்துள்ளது. இந்த சோதனையில் ஆயிரக்கணக்கான நாய்களின் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு பரிதாபமாக இறந்ததாகக் கூறப்படுகிறது. (10)

# போதைப்பொருள் கடத்துவோருக்கு மரண தண்டனை: ட்ரம்ப் அதிரடி

(வோஷிங்டன்)
அமெரிக்காவில் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். வலி நிவாரணி மருந்துகளுக்கு மக்கள் அடிமையாவதை தடுக்கும் தனது திட்டத்தின் ஒருபகுதியாக ட்ரம்ப், மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

வலி நிவாரணியாக பயன்படுத்தப்படும் 'ஒபியோயிட்' என்றும் மருந்தினால் பாதிக்கப்பட்டுள்ள நியூ ஹம்ஷயர் மாநிலத்தில் கருத்து தெரிவிக்கும் போதே ட்ரம்ப் மேற்படி முன்மொழிந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தை மாற்றிய மைக்க தனது நிர்வாகம் முயற்சிப்பதாகவும் அதனால், கடுமையான அரசியல் மற்றும் நீதித்துறை எதிர்ப்புக்களை சந்திக்கும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனில் நாம் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம் என்றும் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.



சுமார் 2.4 மில்லியன் அமெரிக்கர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். இதனால் கடந்த 2016 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சுமார் 63 ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (10)

# பிரிட்டன் பெண்ணுக்கு நல்லாசிரியர் விருது
## ஐக்கிய அரபு அமீரகத்தில் வழங்கல்

130 மொழிகளை பேசும் குழந்தைகளுக்கு கலைகள், படைப்பாற்றலுடன் கூடிய கற்றல்திறனை ஊக்குவிக்கும் பிரிட்டன் நாட்டு பெண்மணிக்கு உலகின் சிறந்த நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த ஆசிரியர் விருதுக்காக ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, கென்யா உள்ளிட்ட 170 நாடுகளை சேர்ந்த ஆசிரியர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தன. இந்தப் பெயர்களையும், மாணவர்களின் நலனுக்காக அவர்கள் ஆற்றிய தொண்டுகளையும் பரிசீலித்த தேர்வுக் குழுவினர், பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த ஆசிரியையான ஆண்டிரியா ஸபிரக்கோவ்(39) என்பவரை இந்த சிறப்புமிக்க பரிசுக்கு தேர்வு செய்துள்ளனர். கிரேக்க நாட்டை பூர்வீகமாக கொண்ட ஆண்டிரியா ஸபிரக்கோவ், பிரிட்டன் வடமேற்கில் உள்ள இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் பரோ ஆஃப் பிரெண்ட் பகுதியில் அமைந்துள்ள ஆல்பெர்ட்டன் கம்யூனிட்டி பாடசாலையில் கலை மற்றும் ஆடைத்துறை வடிவமைப்பு ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இங்கு சுமார் 130 மொழிகளை பேசும் 1350 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இங்கு படித்துவரும் பல்வேறு பன்முகத்தன்மை கொண்ட பிள்ளைகளுக்கு விளையாட்டு, இசை மற்றும் கலை வகுப்புகளின் மூலம் மேம்பாடு அடைய ஆசிரியை தொழில் வாயிலாக சேவை செய்து வருவதற்காக இவ்விருதுக்கு இவர் தேர்வு செய்யப்பட்டார். ஐக்கிய அரபு அமீரக நாடுகளின் பிரதமரும், டுபாய் மன்னருமான ஷேக் முஹம்மது பின் ரஷித் அல் மக்தூம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில் உலகின் சிறந்த நல்லாசிரியர் விருதையும், பத்து லட்சம் அமெரிக்க டொலர் ரொக்கப் பரிசையும் ஆண்டிரியா ஸபிரக்கோவுக்கு வழங்கி கௌரவித்தார். (10)

# தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் தாய்வானை எச்சரித்தார் ஜின்பிங்

சீன குடியரசாக இருப்பினும் சுயமாக ஆட்சி நடத்தி வரும் சீனாவின் புனித பகுதியாக கருதப்படும் தாய்வானுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலுவான எச்சரிக்கையை விடுத்துள்ளார். பிரிவினை வாதத்தின் எந்தவொரு முயற்சிக்கும் தாய்வான் வரலாற்றில் தண்டனையை எதிர்கொள்ளும் என எச்சரித்துள்ளார்.

தேசிய மக்கள் காங்கிரஸ் கூட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு எச்சரித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்கவும், முழுமையான ஒருங்கிணைப்பை உணர்த்துவதற்குமான ஒரு பகிரங்க எதிர்பார்ப்பு இது"

சீனாவை பிளவுபடுத்தும் எந்தவொரு செயல்களும் தந்திரங்களும் தோல்விக்கு வழிசமைக்கும் என்பதுடன் மக்களின் கண்டனங்களுக்கும் வரலாற்றில் தண்டனையையும் எதிர்கொள்ளும்.

எந்தவொரு பிரிவினைவாத நடவடிக்கையையும் தோற்கடிக்கும் திறனையும் நம்பிக்கையையும் சீனா கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜின்பிங் கருத்திற்கு பதிலளித்த தாய்வான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஆன்ட்ரூ எச்.சி. லீ, நாம் எங்களுடைய இராஜதந்திர வேலைகள் தொடர்பான ஏனைய நாடுகளின் கருத்துகளில் அக்கறை கொள்ளவில்லை. எம்முடைய முயற்சிகள் தொடரும். நிறுத்தப்படாது. நிச்சயமாக பிராந்திய சமாதானத்தில் தாய்வான் முக்கிய பங்கை கொண்டுள்ளது. பிராந்திய அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதில் நாம் இன்னமும் தீவிரமான பங்களிப்பை வழங்க முடியும் என்று நம்புகின்றோம்" என தெரிவித்துள்ளார்.

சீனாவின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் ஆபத்தான இராணுவ நிலைப்பாடுகளில் தாய்வானும் ஒன்றாகும். தாய்வானுக்கு எதிரான சீனாவின் விரோதப் போக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் அதிகரித்துள்ளது. தாய்வானின் ஜனாதிபதியாக சுயாதீன சார்பு ஜனநாயக முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த சாய் இங் வென் தேர்தெடுக்கப்பட்டதிலிருந்து இந்த விரோத போக்கு அதிகரித்துள்ளது.

சாய் இங் வென், பீஜிங்கிலிருந்து தாய்வானின் முறையான சுதந்திரத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக சீனா சந்தேகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

# அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை சமூகக் கடமையாக கருதுங்கள்

## நிதி அமைச்சர் மங்கள வலியுறுத்து

(கொழும்பு)

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை சகலரும் செலுத்த வேண்டும் எனவும் அதனை ஒரு சமூகக் கடமையாகக் கொள்ள வேண்டும் எனவும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டமொன்றும் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (இ-7)



# கொழும்பு மாநகரசபை முதல் பெண் முதல்வராகப் பதவியேற்றார் ரோஸி



(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையின் முதலாவது பெண் முதல்வராக, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரோஸி சேனநாயக்க நேற்று முன்தினம் மாலை பதவியேற்றுக் கொண்டார்.

கடந்த மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

இதையடுத்து அந்தக் கட்சியின் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ரோசி சேனநாயக்கவை கொழும்பு மாநகர முதல்வராக பிரகடனம் செய்யும் அரசிதழ் அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதையடுத்து, அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடந்த நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரின் முன்னிலையில், ரோஸி சேனநாயக்க கொழும்பு மாநகர முதல்வராகப் பதவியேற்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், ஐ.தே.க. முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# நள்ளிரவில் நடுவீதிக்கு வந்த மக்கள்! கொழும்பில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு தெமட்டகொடைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக ஏராளமான பொதுமக்கள் நடுவீதிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தெமட்டகொடை மௌலானா தோட்டம் எனும் பிரதேசத்திலேயே குறித்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது அப்பிரதேசத்தில் இருந்த 09 வீடுகள் முற்றாக தீக்கிரையாகி சேதமடைந்துள்ளன.

சொத்துக்களின் சேதங்கள் குறித்து இதுவரை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

தீவிபத்தினை அடுத்து அப்பிரதேசத்தின் ஏனைய வீடுகளில் இருந்த பொதுமக்களும் அச்சம் காரணமாக இரவை வீதியிலேயே கழித்துள்ளனர்.

தீவிபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை ஈராக் தூதுவரிடம் சுட்டிக்காட்டிய பிரதியமைச்சர் ஹரீஸ்

(கொழும்பு)

கண்டி, அம்பாறை வன்முறைகள் தொடர்பில், இலங்கைக்கான ஈராக் நாட்டின் தூதுவர் அகமட் ஹமீட் அல் ஜுமைலிடம் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எம். ஹரீஸ் கலந்துரையாடினார்.

இலங்கைக்கான ஈராக் நாட்டின் தூதுவர் அகமட் ஹமீட் அல் ஜுமைல் விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிரதி அமைச்சர் ஹரீஸை சந்தித்து இலங்கை மற்றும் ஈராக் நாடுகளுக்கிடையிலான நட்புறவு தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போதே பிரதி அமைச்சர் கண்டி மற்றும் அம்பாறை பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஈராக் தூதுவருக்கு சுட்டிக்காட்டினார்.

அசாதாரண சூழ்நிலையின்போது பள்ளிவாசல்கள், முஸ்லிம்களின் வீடுகள், வியாபார நிலையங்கள் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டமை, அவற்றினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்புக்கள் மற்றும் தற்போதைய பாதுகாப்பு நிலைமை என்பன தொடர்பிலும் அவர் இதன்போது எடுத்துக்கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கை மற்றும் ஈராக் நாடுகளுக்கிடையிலான பரஸ்பர விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



# ரணிலுக்கு எதிராக வாக்களிக்கத்தயார்

## சு.க.சுதர்ஷனி தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தால், அதற்கு ஆதரவாக வாக்களிப்போம் என அரசாங்கத்துடன் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பிரணாந்து புள்ளே தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கீழ்ப்படிதல் கேவலமா?

வீதியில் சென்று கொண்டிருக்கும் போது பொலிஸ்காரர் 'ஓரமாப்போ' என்றோ 'நில்' என்றோ சாடை காட்டுகிறார். இதனால் எவருக்கும் கோபம் வருவதில்லை. வரவும் கூடாது. இதையே வேறு ஒருவர் சொன்னால் நமக்குக் கோபம் வருகிறது.

அவர் நம்முடைய நன்மைக்குத் தான் சொன்னார் என்று எண்ணிப் பார்த்தால் கோபம் வராது.

கீழ்ப்படிவது என்பது பலரிடம் இல்லாத குணமாக மாறி வருகிறது. அந்தக் காலத்திலெல்லாம் அப்பா சொன்னால் அதுதான் சட்டம். இப்போது அப்படியா? ஏம்பா அப்படிச் சொன்னே? என்றோ முடியாது போன்றோ பதில் வருகிறது பிள்ளைகளிடமிருந்து.

மனைவி ஸ்தானத்தில் இருக்கும் பெண்களும் இப்படித்தான். கருத்துச் சுதந்திரமும் சிந்திக்கும் ஆற்றலும் வந்துவிட்டதால் இந்த வளர்ச்சி.

முன்பெல்லாம் முதலாளி சொன்னால் அதைச் சிரமேற்கொண்டு செய்த தொழிலாளிகள் உண்டு. இப்போது குறைந்துவிட்டதல்லவா?

கீழ்ப்படிதல் என்பது கேவலம் என்றும், அவர் என்ன சொல்வது, நாம் என்ன கேட்பது என்றும் எல்லோரும் சிந்திக்கத் தொடங்கிவிட்டதன் விளைவு இது.

அன்புக்கோ அதிகாரத்திற்கோ கீழ்ப்படிதல் என்பது நன்மைக்குத்தான்.

சொன்னது கேட்கிற பிள்ளைகளைத் தான் பெற்றோருக்குப் பிடிக்கிறது. சொன்னது கேட்கிற கணவன் தான் நிம்மதியாகக் குடும்பம் நடத்துகின்றார். பணிந்து நடக்கிற ஊழியன்தான் இதயத்தில் இடம் பிடிக்கின்றான். அவனுக்கு என்றால் எல்லா விடயத்திலும் தனிச் சலுகைதான்.

சொல்லப் போனால் அபூர்வமாகிவிட்ட இந்தக் குணம் காரணமாக கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுக்கு இப்போது மதிப்பும் மவுசும் பெருகி வருகிறது. இந்த நேரத்தில் அந்தக் குணத்தை உதறுவது கூடாது.

கீழ்ப்படிவதில் சில சிரமங்களும் இருக்கின்றன. என்னது இது? எல்லாத்துக்கும் தலையாட்டிக்கிட்டு? முடியாதுன்னு சொல்லு என்று தூண்டிவிட ஆண்கள் தயார். இவர்களைச் சமாளித்தாக வேண்டும். குனியக் குனியக் குட்டுகிறவர்கள் உண்டு. இவர்களைச் சமாளித்தாக வேண்டும். கீழ்ப்படிந்து கீழ்ப்படிந்து அவர்கள் வழி சரியாக வராத போது அதை எடுத்துக் கூறத்தான் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே மறுத்துவிடாமல் அந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை எடுத்துக்கூறி அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வது முக்கியம்.

நாம் யாருக்கு கடமைப்பட்டிருக்கிறோமோ அவர்களுக்கும் அன்புக்குரிய வர்களுக்கும் யார் நம் நன்மைக்குச் சொல்கிறார்களோ அவர்களுக்கும் கீழ்ப்படிந்தால் தவறு இல்லை. அதனால் சில நட்டங்கள் வந்தாலும் சரி, யார் கேலி செய்தாலும் சரி!

**லேனா தமிழ்வாணன்**

சென்றவாரத் தொடர்ச்சி...

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

தயவு செய்து வெளியே செல்லுங்கள் ....................................

..........................................................................

10. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.......................................

11. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

தாத்தா ஆவாதா.........................................................

12. நீர் ஒரு ஐந்தாந்தரத்தில் கற்கும் மாணவி என்ற வகையில் 'எனது வகுப்பிற்காக நான் ஆற்றும் கடமைகள்' என்பது பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)

1. ..........................................................................

..........................................................................

2. ..........................................................................

..........................................................................

3. ..........................................................................


..........................................................................

➢ தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.

13. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக?

5435 ..........................................................................

14.





வட்டத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக?

15. தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு முன் பின் உரோமன் இலக்கங்களை எழுதுக.

| முன் உரோமன் எண் | உரோமன் எண் | பின் உரோமன் எண் |
|---|---|---|
| ............................ | Viii | ............................ |

16.



1. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழுவதின் பின்னமாக எழுதுக?

......................................

2. நிழற்றப்படாத பகுதியை பின்னமாக எழுதுக?

......................................

➢ உருவில் உள்ள சதுரமுகியின்



17. விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

......................................

18. முகங்களின் எண்ணிக்கை யாது?

......................................

19. ரமணன் மு.ப. 7.20 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 25 நிமிடங்களின் பின்னர் பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடைந்த நேரம் யாது?


20.



அடைப்புக்குள் தரப்பட்டுள்ள உருக்களில் 2/3 பங்கை நிழற்றுக?

......................................


21.



1. இவ்வுருவினுள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

2. உருவின் சமச்சீர் கோட்டை உருவினுள்ளே வரைக?

22.




வட்டத்திலுள்ள எண்களில் 7 இன் மடங்குகளை எழுதுக?

➢ ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியில் ஒரு பகுதி காணப்படுகிறது.

| | |
|---|---|
| ஒரு பென்சில் | ரூ 12.00 |
| ஒரு பேனா | ரூ 18.00 |
| ஒரு அழிறப்பர் | ரூ 8.00 |
| ஒரு வர்ணப்பெட்டி | ரூ 48.00 |

23. விலைப்பட்டியலுக்கேற்ப பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| பொருள் | எண்ணிக்கை | பணம் | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| பென்சில் | 2 | 24 | 00 |
| பேனா | 3 | ............... | ............... |
| அழிறப்பர் | ............... | 32 | 00 |
| வர்ணப்பெட்டி | 2 | 96 | 00 |

24. ராஜி மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பொருட்களை விலைக்கு வாங்குகிறாள்.

1. பொருட்களுக்காக அவள் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? ..........................................

2. பொருட்களை வாங்கிய பின் ரூ 500.00 பணத்தை கடை உரிமையாளருக்கு கொடுக்கும் போது அவளுக்கு கிடைக்கும் மீதிப் பணம் யாது?

25. 618 புத்தகங்களை ஆறு நூலகங்களுக்கு சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டன. ஒரு நூலகத்திற்கு பகிர்ந்தளித்த புத்தகங்கள் எத்தனை? ....................

26.

| | kg | . | g |
|---|---|---|---|
| + | 4 | . | 750 |
| | 3 | . | 650 |

27. ஒரு பாத்திரத்தில் இருந்த பானத்திலிருந்து 2 லீற்றர் 250 மில்லி லீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 7 லீற்றர் 475 மில்லி லீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த பானத்தின் கனவளவு யாது?

28. தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்து வரும் எண்ணை எழுதுக..

1. 6, 11, 16, 21, ..........    2. 48, 41, 34, 27 ............

29. 4m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 4cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டி அகற்றப்பட்டன. நாடாவின் எஞ்சிய பகுதியின் நீளம் யாது?

..............................

30. 9 8 7 0 உடன் 7 0 5 ஐக் கூட்டுக. கூட்டுத் தொகையாது?

..............................

➢ 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

31. வருடத்தில் ஒரு முறை மட்டும் பூத்துக் காய்க்கும் தாவரம்?
1. மா 2. தென்னை 3. நாவல் 4. பப்பாசி

32. சித்திரை மாதத்தில் பூக்கும் மரம் எது?
1. பனை 2. முள்முருக்கு 3. ஆல் 4. தேக்கு

33. இலங்கையின் அரச கரும மொழிகள்?
1. மூன்று 2. நான்கு 3. ஒன்று 4. இரண்டு

34. இலங்கையின் பொதுப் போக்குவரத்து வாகனமாகப் பயன்படுபவை?
1. பேருந்து, வான் 2. பேருந்து புகையிரதம்
3. புகையிரதம் கார் 4. கார், வான்

35. காலாவதியான உணவை உண்பதால் ஏற்படும் நோய்?
1. டெங்கு 2. நெருப்புக் காய்ச்சல் 3. செங்கண்மாரி 4. வாந்திபேதி

36. நாட்டின் சகல இன மக்கள் பிரிவினரில் பெண்கள் பயன்படுத்தும் ஆடை?
1. சேலை 2. பாவாடை 3. மேற்சட்டை 4. சல்வார்

37. இலங்கையின் தேசிய விளையாட்டு?
1. கிரிக்கெட் 2. எல்லே 3. கிளித்தட்டு 4. வொலிபோல்

38. உலர்த்துதல் மூலம் நற்காப்புச் செய்யும் பழம்?
1. மாம்பழம் 2. விளாம்பழம் 3. பலாப்பழம் 4. பிலிங்பழம்

39. தாவரங்களின் வேர்களை அரித்துண்ணும் பிராணி?
1. கறையான் 2. நத்தை 3. மண்புழு 4. வண்டு

40. செவ்வெறும்பு இனப்பெருக்கும் தாவரப்பகுதி?
1. தண்டு 2. கிளை 3. தளிர் 4. வண்டு

41. இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு?
1. இந்தியா 2. பாகிஸ்தான்
3. ஆபிரிக்கா 4. மலேசியா.

# முன்னாள் போராளிகள் மருத்துவச் சான்றிதழ் பெற இலகுவான மாற்று ஏற்பாடுகளை முன்னெடுக்க முடியுமா?

## அரசிடம் டக்ளஸ் எம்.பி.கேள்வி


(கொழும்பு)

புனர்வாழ்வு அதிகார சபையால் யுத்தகால கட்டத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற நட்ட ஈடுகளை முன்னாள் இயக்க உறுப்பினர்கள் பெறவும் மருத்துவச் சான்றிதழ் தொடர்பில் இலகுவான மாற்று ஏற்பாடுகளை முன்னெடுகக முடியுமா? என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகாரங்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதனிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 23/2 நியதி கேள்வி நேரத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்த காலத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கென புனர்வாழ்வு அதிகார சபையினால் நட்டஈடுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் முன்னாள இயக்க உறுப்பினர்களுக்கும் இந்த வாய்ப்பு கிட்டியிருந்தும் புனர்வாழ்வு அதிகார சபையின் சில நிபந்தனைகள் காரணமாக முன்னாள் இயக்க உறுப்பினர்களால் மேற்படி நட்ட ஈடுகளைப் பெற இயலாதுள்ளதாகத் தெரிய வருகின்றது. குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் அப்பாதப்புகளுக்கான சிகிச்சைகளைப் பெற்ற மருத்துவச் சான்றிதழ்கள் கோரப்படுவதாகத் தெரிய வருகின்றது.

யுத்தம் இடம்பெற்றிருந்த காலப் பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த முன்னாள் இயக்க உறுப்பினர்கள் அப்போது அந்தந்தப் பகுதிகளில் இயங்கியிருந்த மற்றும் புலிகள் இயக்கத்தினரால் செயற்படுத்தப்பட்டிருந்த மருத்துவ நிலையங்களிலேயே சிகிச்சை பெற வேண்டிய நிலை இருந்தது.



அந்தக் காலகட்டங்களில் முறையான பதிவுகள் மற்றும் நோயாளி அட்டைகள் என்பன பெற்றுக் கொள்ளக் கூடியவாய்ப்புகள் இருக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்களது காயப்பட்ட தழும்புகளைத் தவிர அவர்கள் சிகிச்சை பெற்றதற்கான வேறு ஆவணங்கள் எதுவும இல்லை என்றும் தற்போது அரச வைத்தியசாலைகளில் மருத்துவச் சான்றிதழ் கள் பெற இயலாதுள்ளது என்றும் மேற்படி முன்னாள் இயக்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள்இயக்கஉறுபபினர்கள் தொழில் வாய்ப்புகள இன்றியும் போதிய வாழ்வாதார வசதிகள் இன்றியும்தொடர்ந்தும் துயரமான வாழ்க்கையினையே மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய நிலையில் இவர்களுக்கான நட்டஈடு கள் கிடைப்பின் அது இவர்களுக்கு பெரும் உதவியாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் புத்தூர் மத்திய பஞ்சசீல வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. ஜேர்மன் நாட்டில் வசிக்கும் அல்பிரட் பெச்சர் என்பவருடைய நிதி ஒதுக்கீட்டில் அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: பொ.சோபிகா)

42. புத்தளிப்புக் கருவி செய்வதற்கு பயன்படுத்தத்தக்க பொருள் அல்லாதது?
1. உலர்மின்கலம் 2. எக்ஸ்ரே தாள் 3.போத்தல் மூடி 4. சிரட்டை

43. பொதுப் பயன்பாட்டுக்கு மட்டும் உரிய பொருள்?
1. கைக்குட்டை 2. துவாய் 3. சீப்பு 4.புத்தகம்

44. இலையுண்ணும் பிராணி அல்லாதது?
1. நத்தை 2. மரவட்டை 3. மயிர்க்கொட்டி 4. குரங்கு

45. செல்லப் பிராணிகளை சுத்தமாகப் பராமரிக்காவிட்டால் எமக்கு ஏற்படக் கூடிய நோய்?
1. தேமல் 2. முகப்பரு 3.பற்சூத்தை 4. சொறி

46. இலங்கையின் தேசிய மலர்?
1. மல்லிகை 2. நீலஅல்லி 3. நீலோற்பலம் 4.அல்லி

47. மனதை ஒரு நிலைப்படுத்தும் சூரிய நமஸ்காரப் பயிற்சியின் மூன்றாவது படிநிலை?
1.உதிப்பு 2. உறுதிப்பாடு 3.உடலைத் தளர்த்தல் 4. பிரார்த்தனை


48. தரம் 4 மாணவர்கள் மாதிரி அஞ்சல் அலுவலகம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டனர். இதற்குத் தேவைப்படாத பொருள்?
1. முத்திரை 2. கடிதஉறை 3.தொலைபேசி 4. வானொலி

49. ஊசித்துளைக் கமரா மூலம் காட்சியொன்றைப் பார்க்கும் போது அவதானிக்க கூடிய விம்பம்?
1. நேரான விம்பம் 2. நேரான பெரியவிம்பம்
3. தலைகீழ் விம்பம் 4. நேரான சிறிய விம்பம்

50. இலங்கையின் தரைத்தோற்ற அமைப்புக்களில் காணக் கூடிய கல்வகை ஒன்று?
1. படிகம் 2. மணல் 3. களி 4. உக்கல்

51. 'குப்பிரெண்டும் கும்பகோணம் டக்குமிக்கு டிக்குத் தாளம்' இப்பாடலடி?
1. தோணிப் பாடல் 2. வண்டிக்காரன் பாடல்
3. அரிவுவெட்டு பாடல் 4. சேனை காத்தற் பாடல்

52. மாற்று முறையில் வீட்டுத் தோட்டம் செய்வதற்கு தேவைப்படாத பொருள்?
1. தென்னம் பொச்சு 2. பழையபரயர்
3. சட்டி 4. சிரட்டை

53. 
தரப்பட்ட உருவின் பெயர்?
1. சில்லு வண்டி
2. சுழல் வண்டி
3. ஒற்றைச் சில்லு வண்டி
4. தள்ளு வண்டி

54. இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்?
1. வட மாகாணம்
2. தென் மாகாணம்
3. மத்திய மாகாணம்
4. மேல் மாகாணம்

55. உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி?
1. ஆங்கிலம் 2. சிங்களம் 3. மாண்டரின் 4. ஹிந்தி

56. ஒரு தாவரத்தின் இரு கிளைகளில் ஒன்றில் அதிக பூக்களும் மற்றையதில் குறைந் தளவு பூக்களும் காணப்பட்டன எனின் இதற்கான காரணமாக அமையத் தக்கது
1. வேறுபட்ட அளவில் கிடைத்த வளி
2. வேறுபட்ட அளவில் கிடைத்த சூரிய ஒளி
3. வேறுபட்ட அளவில் கிடைத்த போசணை
4. வேறுபட்ட அளவில் கிடைத்த நீர்

57. தாவரங்களில் மகரந்தச் சேர்க்கையை அதிகளவில் நிகழ்த்தும் பிராணிகள்?
1. இலையுண்ண வரும் பிராணிகள்
2. பழம் உண்ண வரும் பிராணிகள்
3. கிழங்கை உண்ண வரும் பிராணிகள்
4. பூக்களில் தேன் பருக வரும் பிராணிகள்

58. பிளேக் நோயை உருவாக்குவது?
1. எலியின் உடலில் வாழும் தெள்ளு
2. எலியின் நகங்களிலுள்ள விசம்
3. எலியின் உமிழ் நீர்
4. எலியின் பற்களிலுள்ள விசம்

59. சூழல் சமநிலையை பாதிக்கக் கூடிய காரணி?
1. புதிய மரங்களை நாட்டுதல்
2. காடுகளைப் பாதுகாத்தல்
3. மண்வளத்தைப் பாதுகாத்தல்
4. சூழலில் குறிப்பிட்ட பிராணி அல்லது தாவரங்கள் அதிகமாகப் பெருக்கமடைதல்

60. டெங்கு நுளம்புகள் பெருகாமல் தடுக்கும் வழிமுறை அல்லாதது?
1. சுற்றாடலில் மழைநீர் தேங்கி நிற்காது பராமரித்தல்
2. சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்
3. நீர் தேங்கி நிற்கத்தக்க பொருட்களை இல்லாது செய்தல்
4. நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை சூழலில் வீசுதல்

# செய்ந்நன்றியை மறக்கவில்லை என்று சொல்லும் ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாரங்களை இதுவரையில் செய்யவில்லை

## மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் காட்டம்


(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தனக்குச் செய்த நன்றியை ஒருபோதும் மறக்கவில்லை என்றும் அதன் காரணமாகவே தமிழர் பிரதேசங்களில் நிகழும் நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வதாகவும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ரையின் போது தெரிவித்திருக்கிறார். ஆனால்,தமிழ் மக்களின் செய்ந்நன்றியை மற்க்கவில்லை என்று சொல்லும் ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாரங்களை இதுவரையில் தமிழ்மக்களுக்குச் செய்யவேயில்லை.அவரது வருகை மட்டுமே பிரதியுபகாரங்களாக அமையாது என்பதை அவர் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பாக ஊடகங்களுக்கு பொ.ஐங்கரநேசன் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபோது ஆற்றிய உரையில், தமிழ்மக்கள் தனக்குச் செய்த நன்றியை ஒருபோதும் மறக்கவில்லை என்றும் அதன் காரணமாகவே தமிழர் பிரதேசங்களில் நிகழுகின்ற நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு அவர் நன்றி சொல்வது இதுதான் முதற் தடவையல்ல. தமிழ் மக்களின் வாக்குகளாலேயேதான் அரியணை ஏறியதைத் தமிழர் தாயகங்களுக்கு வருகை தருகின்ற போதெல்லாம் மறக்காமல் நினைவு கூர்ந்தே செல்கின்றார். ஆனால், தமிழ் மக்களின் செய்ந்நன்றியை மறக்க வில்லை என்று சொல்லும் ஜனாதிபதி அதற்கான பிரதியுபகாறுங்களை இதுவரையில் தமிழ்மக்களுக்குச் செய்யவேயில்லை. அவரது வருகைமட்டுமே பிரதியுபகாரங்களாக அமையாது என்பதை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும்.



காணாமல் ஆக்கப்படடோரைக் கண்டறிய வேண்டியும் அரசியல் கைதிகளின் விடுதலையை அவாவியும் ஏதிலிகளாக அல்லலுற்று அலையும் எம்மக்கள் தம் சொந்த இடங்களில் குடியேற விரும்பியும், தங்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் கோரியுமே ஒரு மாற்றத்துக்காக மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ்மக்கள் வாக்களித்தார்கள்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் ஜனாதிபதி இதுவரையில் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் தமிழ்மக்களின் மனங்களைப் புண்படுத்தும் பதில்களையே தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகிறார். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களைக் கையாள்வதற்கென்று குழுவொன்றை அமைத்துவிட்டதால் அது தொடர்பாகத் தான் இனி மேல் சொல்வதற்கு எதுவும் இல்லை என்றும் யாழ்ப்பாண வருகையின் போது பதிலுரைத்துச் சென்றுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவரின் வருகையை ஒட்டி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்த போதே அம்மக்களின் உணர்வு நிலையை உதாசீனம் செய்து இவ்வாறு மொழிந்து சென்றிருக்கிறார்.

போர் நடந்த போது அன்றைய அமைச்சரவையில் ஒருவராக இருந்தவரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றிருந்தபோது பதில் பாதுகாப்பு அமைச்சராக இறுதி யுத்தத்தை நடத்திச் சென்றவரும் என்றவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் பதில்சொல்ல வேண்டிய கட்டாய கடப்பாட்டைக் கொண்டவராவார். காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தங்களது பிள்ளைகள் புகைப்படம் ஒன்றில் ஜனாதிபதியின் அருகில் நிற்பதாக அடையாளம் காட்டிய பின்னரும் ஜனாதிபதி இப்பிரச்சினையைக் குழுவிடம் கையளித்துத் தான் தப்பிக்க முயற்சிப்பதைத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியாளர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்த அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை மட்டும் தொடர்ந்தும் சிறையில் வாட்டிவருகிறது.

நல்லாட்சி அரசாங்கத்துக்குத் தமிழ்மக்கள் நம்பி வாக் களித்ததன் பின்னரும் கூட அரசாங்கம் இவர்களின் விடுதலையில் எவ்வித அக்கறையையும் காட்டவில்லை. இவர்களது குடும்பங்கள் அனுபவித்துவரும் துயரங்கள் சொல்லிமாளாதவை.

தாயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வருகை தந்த அரசியல் கைதி யான தனது தந்தையுடன் செல்வதற்காகக் பொலிஸாரின் வாகனத்தில் பிஞ்சுப் பாலகி ஏறிய காட்சியைப் பார்த்து பொலிஸாரே கண் ணீர் உதித் திருக் கின் றனர். ஆனால்இதுவரையில்சிறைக் கொட்டடியில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் அனுபவித்து வரும் இன்னோரன்ன பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி கவனம் கொள்ளாதவராகவே இருந்து வருகிறார்.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன் வார்த்தைகளால் நன்றிசொல்வதை விடுத்து அந்நன்றியை செயல்களில் காட்டவேண்டும் என்பதே போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. தவறின் செய்ந்நன்றி கொன்றவராகவே வரலாற்றில் இந்த ஜனாதிபதியும் இடம் பெறுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# கண்டியில் வன்முறைக்கு காரணமானவர்களை கைது செய்ய உரிய நடவடிக்கை வேண்டும்

## பிரதமரிடம் முஸ்லிம் எம்.பிக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைக்கு காரணமானவர்களில் இதுவரை கைது செய்யப்படாதவர்களை உடன் கைது செய்யுமாறும் இந்த வன்முறையின் போது கவனயீனமாக செயற்பட்ட பொலிஸாருக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறை தெடர்பில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அலரிமாளிகையில் வைத்து சந்தித்து பேச்சுவாரத்தை நடத்தினர்.

இந்த சந்திப்பில் முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்தனர். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கும் போது, கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்பட்டாலும் இன்னும் பலர் கைது செய்யப்படாமல் உள்ளனர்.. ஆகவே இவர்களை உடன் கைது செய்ய வேண்டும். இந்த விடயத்தில் துரிதமாக செயற்பட வேண்டும்.

மேலும் வன்முறையினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் பள்ளிவாசலுக்கான நட்டஈடு வழங்குவதனை துரிதப்படுத்த வேண்டும்.

அத்துடன் இந்த வன்முறையின் போது பொலிஸார் மிகவும் கவனயீனமாக செயற்பட்டுள்ளனர். ஆகவே இது தொடர்பில் விசாரணை செய்து கவனயீனமாக செயற்பட்ட பொலிஸாருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் வன்முறை ஏற்பட்ட பகுதிகளில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நன்றாக செவிமடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பிக்களின் கோரிக்கை விடயத்தில் விசேட அவதானம் செலுத்தினர்.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதிலை முன்வைக்கையில்,

கண்டி மாவட்டத்தின் திகன,தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற வன்முறைக்கு காரணமானவர்கள் பலரை கைது செய்துள்ளோம். எனினும் இன்னும் பலர் கைது செய்யப்படாமல் உள்ளனர். இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது அதற்காக பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் கண்டிக்கு சென்றுள்ளனர்.

அத்துடன் வன்முறையினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் பள்ளிவாசல்கள் சேத விபரங்களை தற்போது அளவிடப்பட்டு வருகின்றன. இதன் பின்னர் துரிதமாக சேதமடைந்த உடைமைகளுக்கு நட்ட ஈடு வழங்கப்படும். இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை பிறகு நடத்துவோம் என கூறியுள்ளார்.

அத்துடன் இந்த வன்முறையின் போது கவனயீனமாக செயற்பட்ட பொலிஸார் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகள் முடிந்த பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து கண்டி சம்பவம் போன்று இனி மேலும் இவ்வாறான வன்முறைகள் இடம்பெறாமல் இருக்க அரசாங்கம் உரிய வேலைத்திட்டங்களை தயாரிக்க வேண்டும் என முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-7)

# நாடாளுமன்ற உறுப்பினர் ரணவீரவுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நபர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டிருந்த இவர் நேற்று செவ்வாய்க் கிழமை மஹர நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே நீதிமன்றம் இவருக்கான விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தது.

நடந்துமுடிந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலில் களனி பிரதேச சபைக்காக போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர மீது காணப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இரவு கிரிபத்கொடை விஹாரமகாதேவி மகளிர் வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

தாக்குதலுக்கு இலக்கான வேட்பாளர் தொடர்ந்தும் கிரிபத்கொடை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை பல்கலை.ஊழியர் போராட்டம் தொடரும்

(கொழும்பு)


உயர் கல்வியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதும், தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றும் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

வேதன உயர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பு, நேற்று 21 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

உயர் கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இதன் போது தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் உப தலைவர் எட்வட் மல்வத்தகே தெரிவித்தார். (இ-7)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டடப் பொருட்கள் பெறுவதில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனருத்தாரணப் பணிகளுடன் அபிவிருத்தி சார் பெரும் கட்டடங்கள், உட்கட்டுமானங்கள் அமைப்பதற்கும் பெருமளவு கட்டடப் பொருட்கள் தேவைப்படுகின்றன. மணல், மண், கல்லு, சல்லி வகைகள், நொருக்கப்பட்ட தூசு, செங்கட்டி, சீமெந்துக் கல் போன்றன பெருமளவு தேவைப்படுகின்றன. சீமெந்து, இரும்பு போன்றன இறக்குமதி செய்யப்படுவதால் விலை உயர்வாக இருப்பினும் சந்தையில் கிடைக்கின்றன. ஆனால் மணல் மண்ணை சந்தையில் இலகுவாகப் பெறமுடியாமல் இருப்போர் குறிப்பாக வீடுகள் அமைப்போர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதுடன் தங்கள் தேவைகளை கள்ளச் சந்தையில் உயர்விலையிலேயே பெறவேண்டியுள்ளது. ஒரு டிப்பர் ஆற்று மணல் இன்று 40 ஆயிரம் வரையில் விலையாகின்றது. மேலும் மணலின் விலையும் மிக உயர்வாகவும் இருப்பதுடன் பதிவு செய்து மாதங்கள், வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளன.

மணல் மண் வியாபாரத்தில் ஈடுபடுவோர் சட்டங்களை, நடைமுறைகளை மீறியும் பல்வேறு தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து அரச காணிகளிலிருந்தும் மற்றும் தனியார் காணிகளில் களவாக மற்றும் ஆபத்து நிறைந்த செயற்பாடுகள் மூலம் பொருட்கள் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் மணல் கடத்தும் வாகனமும் சாரதியும் பொலிஸாரால் கைப்பற்றப்படுவதும் வாகனங்கள் நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதையும் காணமுடிகின்றது. மேலும் ஒழுங்கற்ற முறையில் மண், மணல், அகழ் வதால் நிலம் பாழ் நிலமாகவும் மாறுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த காலங்களில் பெருமளவு வீடுகள், கட்டுமானப் பணிகள் இடம்பெற்றதற்கு முக்கிய காரணிகள் தாராளமாகக் கிடைத்த கட்டுமானப் பொருட்களேயாகும்.

போதியளவு சுண்ணாம்புக் கண்டகல், மண்கும்பான் பூச்சு மணல், நாகர்கோயில் பெரிய மணல், காங்கேசன்துறை சீமெந்து மற்றும் உள்ளூர் பனை, வேம்பு என்பனவற்றைக் குறிப்பிடலாம். தாழ்நிலங்களை நிரப்புவதற்கு போதிய மண், மக்கி பெறக்கூடியதாக இருந்தன. மேலும் கொங்கிறீட் பிளேட் போடுவதற்குரிய ஆற்று மணலை (கண்டாவளை மண்)வன்னிப் பகுதியில் இருந்து யாவரணை, மரத்திராந்திகள், பலகைகளை இலகுவாகப் பெற முடிந்தன.

ஆனால் இன்று சுண்ணக்கல் உற்பத்தியும் அதன் வழியாக சல்லிகள் உற்பத்தி குறைவடைந்துள்ளன. எனினும் தென்னிலங்கையில் இருந்து கருங்கல்லும் கருச்சல்லியும் போதியளவு வருவதால் விலையுயர்வாக இருப்பினும் பொருள் கிடைக்கும் நிலை காணப்படுகின்றது.

கட்டுமானத்திற்குத் தேவையான மணலையும் பத்திரிப்புக்களை நிரப்ப தேவைப்படும் மண் மற்றும் பள்ளக் காணிகளை உயர்த்துவதற்குத் தேவையான மண்/ மக்கியை பெறப் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். யாழ்ப்பாண நகரின் பல்வேறு தாழ்நிலப் பகுதிகள் கொட்டு மண் இட்டே நிலம் உயர்த்தப்பட்டன. ஆனால் இன்று நிலமீட்சிக்கும் பத்திரிப்புக்களை நிரப்ப மண்/ மக்கியை பெறுவது கடினமாகி விட்டது. இதனால் வீடு வளவு மாரி காலத்தில் வெள்ளம் தேங்கி விடுவதுண்டு. மேலும் குடியிருப்பு வளவுகளின் மண்ணின் தரம் மேம்படுத்தும் பொழுது வீட்டுத் தோட்டம், நகர விவசாயமும் முன்னெடுக்க முடியும்.

கட்டட பத்திரிப்புக்களை நிரப்ப, தாழ்நிலங்களை உயர்த்த, சதுப்பு நிலங்களை மீட்டெடுக்க மண்/ மக்கி தேவையாகும். குறிப்பாக பெரிய யாழ்ப்பாணத்தின் தேவையையும் மற்றும் சில பிரதேசங்களின் தேவையை எப்படித் தீர்க்க முடியுமென நோக்குவோம்.

யாழ்ப்பாண நகருக்குத் தேவையான மண்/ மக்கியை கல்லுண்டாய்ப் பகுதியில் ஓர் நீர்த்தேக்கம் அமைப்பதில் கிடைக்கும் மண்/ மக்கி போதுமாக இருக்கும். இதுபோல அல்லைப்பிட்டியில் அல்லைப்பிட்டி நுண்வடிகாலை மேம்படுத்த நீர்த்தடுப்பு அணை அமைத்து நீரை மறித்து வைத்துள்ளனர். மழை காலத்தில் கிடைக்கும் மழை இத்தாழ் நிலப்பகுதியில் நீர் ஒரு அடிக்கு மாத்திரம் பரவி நிற்கும். இங்கு தேங்கும் நீர் மாசி, பங்குனி மாதத்திற்குள் நீராவியாகிவிடும். ஆகவே, இப்பகுதியில் ஆழமான நன்னீர்க்குளம் அமைக்கப்படுமானால் இதில் இருந்து கிடைக்கும் மண் பெரிய யாழ்ப்பாணத்துத் தேவையையும் வேலணைத் தீவின் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். இதுபோல தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சித் தேவைகளுக்கு வெவ்வேறு திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1000 குளங்கள் நீண்டகாலமாக தூர் வாராது மண் படிந்து நீர் கொள்ளளவு குறைந்தும் காணப்படுகின்றன. இக்குளங்கள் தூர்வாரப்பட்டால் மேல் மண் மற்றும் குளப்பொருக்கு விவசாய நிலங்களுக்குப் போட முடியும். மற்றைய மண் நிலமீட்டலுக்குப் பயன்படுத்த முடியும். இக்குள தூர்வாரும் திட்டங்களால் ஒரே நேரத்தில் பல பயன்களைப் பெற முடியும். குளநீரின் கொள்ளளவு அதிகரிப்பு, நீரின் புனிதத் தன்மை, குளத்தின் அழகு, பாதுகாப்பு என நீண்டு செல்லும்.

தீவுப்பகுதியில் குறிப்பாக வேலணை, சரவணை, நாரந்தனைப் பகுதிகளில் இன்று காணப்படும் தோட்ட நிலங்கள் 1950 களுக்கு முன்னர் வயல் நிலங்களாக இருந்த காணிகள் குளப்பகுதிகளில் எடுக்கப்பட்ட கொட்டு மண் இட்டு தோட்ட நிலங்களாக மாற்றப்பட்டவைகளாகும். இதனால் பல குளங்களின் நீர் கொள்ளளவு அதிகரித்ததுடன் கோடை காலத்திலும் நீர்வற்றாதுள்ளதுடன் இக் குளங்களில் இருந்து ஏற்று நீர்ப்பாசனம் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் குறிப்பாக பெரிய யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு, தென்மேற்குப் பகுதிகளில் காணப்படும் நரைமண், உவர்மண் பகுதிகளில் குறிப்பாக வீட்டு வளவுகளில் வீட்டுத் தோட்டத்தை மேம்படுத்த மற்றும் பூங்காக்கள் அமைக்க செம்மண் போடுவது வழக்கம். செம்மண் இடுவதால் மண்ணின் தரத்தை உயர்த்துவதுடன் வீட்டுத் தோட்டத்தை முன்னெடுக்க முடிந்தது.

பெரிய யாழ்ப்பாணத்தில் குறிப்பாக பள்ளமான வீட்டுக் காணிகளில் நல்ல முறையில் நகர விவசாயத்தை முன்னெடுக்க செம்பாட்டு மண் தேவைப்படுகின்றது. இன்று இத்தேவைக்குரிய செம்மண்ணைப் பெறுவது கடினம். ஒரு பூச்சாடிக்கு செம்மண்ணைக்கூட திறந்த சந்தையில் பெறமுடியாது.

பெரிய யாழ்ப்பாணத்தில் நகர விவசாயத்தை முன்னெடுக்க தேவையான செம்மண்ணைக் கிடைக்க பின்வரும் வழிகளைக் கையாள முடியும்.

வலிகாமம் வடக்கில் வழுக்கையாற்று மேல் வடி நிலத்தில் பெரியகுளமொன்று அமைக்கப்படும் இடத்து அதில் கிடைக்கும் செம்மண்ணை பெரிய யாழ்ப்பாணத்திற்குக் கொடுக்க முடியும். வலிகாமம் மத்தி வடக்குப் பகுதிகளில் சில சில இடங்களில் செம்மண் கண்டல்கள் காணப்படுகின்றன. இம் மண் கண்டல்கள் 10 அடி வரையில் செம்மண் படிவு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திருநெல்வேலி வளாகத்தில் ஒரு கிடங்கு அமைத்த போது பத்து அடி வரை கல்லில்லாத செம்மண் காணப்பட்டது. இப்படியான மண் கண்டங்கள் நிறைந்த நிலங்களில் கட்டடங்கள் அமைக்கப்படும் பொழுது கிடைக்கும் செம்மண் எடுக்கப்பட்டு நகர விவசாய மேம்பாட்டுக்குப் பயன்படுத்த முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரமே மணல் அகழக்கூடிய சூழ்நிலை ஓரளவு காணப்படுகின்றது.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், கிழக்கு அரியாலை, தென்மராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலிருந்த மண்வளம் முற்றாகத் தீர்ந்த நிலையில் காணப்படுகின்றது. வடமராட்சி கிழக்கில் மணற்காடு, குடத்தனை, பொற்பதி, நாகர்கோயில் பகுதிகள் கரையூர்,அம்பன் கிராமங்களில் இன்றும் மணல் படிவுகள் காணப்படுவதுடன் இங்கு விஞ்ஞான ரீதியாக சுற்றுச் சூழலுக்குக் கெடுதல் ஏற்படாதவாறும் பாழ்நில உருவாக்கத்தை ஏற்படுத்தாத முறையில் மணல் அகழ்வு இடம் பெறலாம். நாட்டின் அபிவிருத்திக்காக சில பகுதிகள் நீரில் அமிழ்தலும் தவிர்க்க முடியாது. உதாரணமாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் விக்டோரியா, கொத்மலை, மொரஹாகந்தை, ரெந்தனிகல, ரந்தம்பை நீர்த்தேக்கங்கள் அமைத்த பொழுது எத்தனை கிராமங்கள் நீரில் அமிழ்ந்தன. ஆனால் அங்கு வாழ்ந்த மக்கள் நட்டப்படவில்லை. இரு பிரிவினருக்கும் வெற்றி வெற்றி என்ற சூழ்நிலையில் திட்டங்களை முன்னெடுத்தால் பிரச்சினை வராது.

வடமராட்சி வடக்கில் வல்லிபுரம், வலக்கண்டிப் பகுதி, தென்மராட்சி கிழக்கு கச்சாய், நல்லூர்ப் பிரிவில் அரியாலை கிழக்கு, தீவுகள், தெற்கில் மண்கும்பான், அல்லைப்பிட்டி பகுதிகளில் கிடைக்கும் மணல் அந்தந்த கிராம மட்ட சிறு அபிவிருத்தி வேலைகளுக்கு மாத்திரம் சிறிதளவு எடுக்க முடியும்.

பூநகரி- சங்குப்பிட்டி வீதியமைக்கப்பட்டிருப்பதால் பூநகரி- கௌதாரிமுனைப் பகுதியில் காணப்படும் மணல் வளம் ஒழுங்கு முறையாகப் பயன்படுத்தினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மண் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். வன்னிப் பிரதேச ஆற்று மணல், மணல், காட்டு மரங்கள் சமூக விரோத சக்திகளால் களவாக எடுத்துச் செல்லப்படுகின்ற தென்ற செய்திகள் ஊடகங்களால் தொடர்ந்து குற்றஞ் சாட்டப்படுவதைக் காணலாம். இந்தப் போக்கு கட்டுப்பாட்டுக்குள். கொண்டு வரப்பட்டதாகத் தெரியவில்லை.

மணல் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் 50 கிலோகிராம், 25 கிலோகிராம், 10 கிலோ கிராம் மணல் பொதிகளை சந்தைக்கு அறிமுகம் செய்தால் மணல் நுகர்வோர் தங்களுக்குத் தேவையான மணலை சீமெந்துப் பக்கெற்றுக்கள் போல வாங்க முடியும். சிறிய தேவைகளுக்கு சிறியளவு வாங்கக் கூடியதாக இருக்கும்.

மேலும் அரசாங்கம் உள்ளூர் மணல் வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால் பிற நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மணல் பக்கெற்றுக்களை இறக்குமதி செய்ய வேண்டும்.


மேற்குறிப்பிட்ட முறைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமிடத்து மண், மணல் விநியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுச் சூழல் பண்பை இழக்காமலும் உண்மையில் மேம்படுத்தக்கூடிய மணல் அகழ்வு உள்நாட்டில் இடம்பெற முடியும்.

மண், மணல் பிரச்சினையால் தான் ஒட்டு வீட்டுத் திட்டம் முன்மொழியப்பட்டு அதன் குறைகள் நிறைகளில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டு யாதொரு முன்னேற்றம் இல்லாது காலம் கழிந்ததுதான் கண்டது. இதனால் அரசாங்கமும் மாவட்ட நிர்வாகமும் மண், மணல் சந்தையில் இலகுவாக நியாய விலையில் சட்ட பிரச்சினையில்லாது கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டும். இதன் மூலமே மாவட்ட உட்கட்டுமானங்களை துரிதமாகச் செய்து முடிக்க முடியும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# கோடை காலத்திற்குரிய மருத்துவ குணம் உள்ள பழங்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



"இயற்கையை நாம் நேசித்தால்
இயற்கையும் நம்மை நேசிக்கும்"

"உடல் நலம் நம் கைகளில் தான்" நாம் நினைத்தால் நோய்கள் இன்றி வாழ முடியும். இயற்கை தந்த உணவுகளை பருவகாலங்களுக்கு ஏற்ப இயற்கை அழித்த பழங்கள், பூக்கள், கீரை, காய்கள் இவற்றை உண்டுவந்தால் நீண்ட காலம் நோய் இன்றி வாழ முடியும். உதாரணமாக எமது பிரதேசத்திற்குரிய பழங்களாக பப்பாசிப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம், வில்வம் பழம், மாதுளம் பழம், தர்ப்பூசணிப்பழம், கொழித்தோடைப்பழம், எலுமிச்சைப்பழம், அழிஞ்சில் பழம், வெள்ளரிப்பழம் போன்ற பழங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

உதாரணமாக நன்கு கனிந்த மாம்பழத்தின் சாறை எடுத்து அதே அளவு பாலும் அதில் அரைவாசி தேனும் கலந்து பருகி வர இதயம் பலப்படும். இப்பழங்களை உண்டு வர மலச்சிக்கல் நீங்கும்.

கண்நோயால் அவதிப்படுபவர் மாலைக்கண், பார்வைக்குறைப்பாடு போன்ற நோய்களுக்கு மாம்பழச்சாறு பருகலாம். நன்கு கனிந்த மாம்பழச்சாறு பருகலாம்.

நன்கு கனிந்த மாம்பழச்சாறு ஒரு மேசைக் கரண்டி, 1/2 தேக்கரண்டி தேன், 1/2 தேக்கரண்டி நெய் கலந்து பருகி வர வயிற்றுப்புண் ஆறும்.

மெலிவான நிலையில் காணப்படும் குழந்தைகளுக்கு மாம்பழச்சாற்றுடன் தேனும் சேர்த்து சாப்பிட குடுக்கலாம். மாம்பழத்தைக் கொண்டு ஜாம், யூஸ் தயாரித்து பயன்படுத்தலாம். பழவகையில் உயிர்ச்சத்து Aயும் B12 அதிகம் உள்ள பழம் இதுவாகும்.

கோடைகளில் சாகுபடியாகும் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் வெள்ளரிப்பழம் மிகவும் கிடைக்கக்கூடிய பழமாகும்.

கோடை காலத்தில் தாகம், களைப்பு போன்ற நிலைமைகள் ஏற்படும். வெள்ளரிப் பழத்தின் தோல் நீக்கி சக்கரை கலந்து சாப்பிட்டு வர உடல் உஷ்ணத்தையும் குறைத்து உடல் குளிர்மையை தரக்கூடிய பழமாகும்.

தற்காலத்தில் மிகவும் உபயோகிக்கக்கூடிய, யாழ்.மாவட்டத்தில் உபயோகிக்கக் கூடிய பழம் தர்ப்பூசணி/ வத்தகைப் பழம் காணப்படுகிறது. இது கோடைகளில் மிகவும் உகந்த நெய்ச்சத்துள்ள பழமாகும். இதனை யூஸ் ஆக தயாரித்து வளரும் குழந்தைகளுக்கு கொடுக்கலாம். அல்லது இதன் பழத்தை சாதாரணமாக சாப்பிடலாம். இதில் இருந்து பெறப்படும் பழரசம் உடல் உஷ்ணத்தை குறைக்கக்கூடிய பழமாகும்.

### வில்வம்பழம்

இது கடைகளில் விற்கப்படுவதில்லை. இது யாழ். மாவட்டத்தில் பரந்து காணப்படுகிறது. இது வருடத்தில் இரண்டு முறை பூத்துக் காய்க்கிறது.

வில்வம் பழத்திற்கு தேவையான அளவு சக்கரை/சீனி சேர்த்து பிசைந்து காலையில் சாப்பிட்டால் வயிற்றுப் புண்ணை நீக்கும். உடலுக்கு குளிர்மை ஏற்படும்.

இதைப்போன்றே விளாம் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும். தொண்டைப்புண், வாய்நீர் உறல் ஆகியவையும் நீங்கக் கூடியதாக இருக்கும்.

நித்திரை விட்டு எழுந்தவுடன் தலைச்சுற்று, மயக்கம், ஓங்காளம் இருப்பவர்கள் நன்கு பழுத்த பழத்துடன் சக்கரை, சீனி சேர்த்து சாப்பிடலாம். நன்கு பழுத்த விளாம் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டுவர நரம்புத்தளர்ச்சி குறையும். விளாம்பழம் விலை குறைந்ததுடன் பலன் அதிகம் உள்ள பழமும் ஆகும்.

முக்கியமான பழமான கொய்யாப்பழம் அதிகளவு உயிர்ச்சத்து C உள்ள பழமாகும். இதைவிட புரதம், சுண்ணாம்புச் சத்துமுள்ள பழமாகும். படுக்கைக்கு போக முன் இதைச் சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும். வளரும் குழந்தைகளுக்கு இப்பழத்துடன் தேன் கலந்து உண்டு வர மூளை வளர்ச்சியும் ஞாபக சக்தியும் அதிகரிக்கும். இவற்றில் இப்படியான கோடை காலங்களில் ஜாம் தயாரிக்கலாம். குடற் புண், வாய்ப்புண், பித்த சம்பந்தமான நோய்க்கு முக்கியமாகும்.

### கொய்யாப்பழ ஜாம்

நன்கு பழுத்த 6 கொய்யாப்பழங்களைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கவேண்டும். ஒரு வாணலியை அடுப்பில்வைத்து அதில் அரை கிலோ சீனி சேர்த்து சிறிது தண்ணீர் விட்டு காய்ச்சவேண்டும். அது பாகு போல் ஆகிவிடும் நிலையில் நறுக்கி வைத்திருக்கும் பழத்துண்டுகளை அதில்போட்டுநன்றாகக் கிளறிக்கொண்டேயிருக்க வேண்டும். பழம் வெந்து வரும் போது கால் லீற்றர் தூய்மையான தேனைவிட்டு 5 ஏலக்காய் போட்டு கிளறி இறக்கி வைக்கவேண்டும்.

பின்பு இளஞ்சூட்டில் மத்தைக் கொண்டு நன்கு கடைந்து தூய்மையான சீசாவில் போட்டு நன்கு மூடித் தேவையான போது எடுத்து இட்லி, தோசை போன்றவற்றோடு சேர்த்து உண்ணலாம். இந்த ஜாம் 15 நாட்கள் வரை கெடாதிருக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் உடலுக்குப் பலத்தையும் கொடுக்கும்.

எமது பிரதேசத்திற்கு உரிய பழங்களில் அதிக உயிர்ச்சத்து A மற்றும் உயிர்ச்சத்து C , மக்னீசியம், பொஸ்பரஸ் உள்ள பழமாக கருதப்படுவது பப்பாசிப் பழமாகும்.

இந்தப் பப்பாசிப் பழத்தை தேன்விட்டு அருந்தி வருதல் மருத்துவகுணமாகும். எனவே பப்பாசிப் பழம் அருந்தும் போது தேன்விட்டுச் சாப்பிடுதல் மிகவும் சிறந்தது.

### பப்பாசிப் பழத்தின் மருத்துவப் பயன்கள்

தினசரி ஒன்றிரண்டு துண்டு பப்பாசிப்பழத்தைச் சாப் பிட்டு வந்தால் உடலில் நல்ல பலம் ஏற்படும். பழம் சாப்பி ட்டு வரும் காலத்தில் இரவு படுக்கைக்குப் போகும் முன் ஒரு டம்ளர் அளவு காய்ச்சிய பசும் பாலைக் குடித்து வர வேண்டும். தொடர்ந்து 40 நாட்கள் இப்படிச் சாப்பிட்டால் உடலில் எந்தவகையான நோயும் தாக்காது. பப்பாசிப் பழத்தில் நுண்ணிய நோய்க்கிருமிகளை கொல்லும் சக்தி மிருந்திருப்பதால் தொற்று நோய் பரவி வரும் காலத்தில் கூட இதனைப் பயன்படுத்தலாம். இறைச்சி வகைகளை உண்ணும் போது மதிய உண விற்குப்பின் இரண்டு துண்டு பப்பாசிப்பழத்தை உண்டால் அதில் காணப்படும் Papain எனும் இராசயனப் பொருள் புரதச் சமிபாட்டை தூண்டி செரிப்பை இலகுவாக்கும்.

இறைச்சியை மென்மைப்படுத்தவும் இது பயன்படும். உதாரணமாக ஆட்டிறைச்சி சமைக்கும் போது ஒரு துண்டு பப்பாசிக்காயை அத்துடன் சேர்த்துச் சமைத்தால் இறைச்சி மிகவும் மென்மையாகி சுவையாக இருக்கும். பப்பாசிப்பழம் சாப்பிட்ட பின் அதி பசி எடுக்கும். இது பழத்திற்கு உள்ள சீரணத்தை மிகுதிப்படுத்தும் தன்மையை வெளிக்காட்டுகிறது. பப்பாசிப் பழம் ஈரலை பலப்படுத்தக் கூடியது.

உடல் பருமன் குறைய முற்றிய பப்பாசிக்காயின் தோலைச் சீவி விட்டு. தேவையான அளவு துண்டுகளாக நறுக்கி சமைத்து வாரத்திற்கு இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் உடற் பருமன் குறையும்.

நீரிழிவு நோயாளிகள் பப்பாசிக்காயை தோலுடன் நன்கு கழுவிய பின்பு தோலைச் சீவி அதிலிருந்து வடியும் பாலையும் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிய பப்பாசிக்காயையும் சுப்பிபாலில்சமைத்துஉண்ண இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும்.

பழங்களின் மன்னன் என அழைக்கப்படும் எலுமிச்சைப்பழம்/நாரைத்தம்பழம் கோடைகளில் பருகுவது உடலிற்கு மிகவும் நல்லது. ஆனால் மக்கள் எலுமிச்சைப்பழம் அசிற் தன்மை உடைய பழம் என்பதால் மக்கள் பயன்படுத்துவது குறைவு. கல்லாக்காரம்/பனம் சற்கண்டு சேர்த்து எலுமிச்சம் பழத்தை பயன்படுத்தலாம்.

இது உடலிற்கு குளிர்மையை ஏற்படுத்தும். கோடை காலங்களில் உகந்த பழங்களில் வாழைப்பழமும் முக்கிய இடம் வகிக்கின்றது.

வாழை இனங்களில் அதிக வகைகள் இருந்தாலும் செவ்வாழைப்பழம் மிகவும் முக்கியமான மருத்துவ குணம் நிறைந்த பழமாகும். வாழைப்பழத்துடன் தேன் சேர்த்து சாப்பிடுதல் மிகவும் நல்லது.

மேற்கூறிய பழங்கள் பெரும்பாலும் உமது பிரதேசத்தில் இயற்கையாக கிடைக்கக் கூடியதாகும். எனவே தற்போது கோடைகாலம் ஆரம்பமாகிஇருப்பதால்பழங்களின் பாவனையை தற்போது அதிகரிக்க வேண்டும். மேற்கூறிய பழங்களின் மருத்துவ குணங்களை அறிந்து இனிவரும் கோடை காலங்களில் பழங்களை பயன்படுத்தி உடலை ஆரோக்கியமாகப்பேண வேண்டும். மருத்துவ குணம் நிறைந்த பழங்களுக்கு தூய தேன், வற்றக்காய்ச்சிய பால் பயன்படுத்தி உண்பது மிகவும் நன்மை தரும்.

# கடந்தகாலத் தவறுகளை மன்னித்து மறக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்

## இராணுவ கட்டளைத் தளபதி அட்வைஸ்



(கொழும்பு)

கடந்த காலத் தவறுகளை மன்னித்து மறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், நிலைமைகள் அவ்வப்போது மாறும் என கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்துஸித்த பனன்வல தெரிவித்தார்.


மட்டக்களப்பு கல்விவலயத்திலுள்ள தன்னாமுனை புனித ஜோசெப் கல்லூரியின் 143 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கல்லூரி அதிபர் மரியான் தம்பி பற்றிக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய பனன்வல, கல்வியை பணம் கொடுத்து வாங்க முடியாது. நாங்கள் ஒருவர் மற்றவரில் கரிசனை கொள்ள வேண்டும்.

நாம் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். வாழ்க்கை அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால் இன்னமும் அது நம்பிக்கை தரும் சிறந்த ஒன்றாகத்தான் இருக்கின்றது. நாம் மற்றவர்களுடன் முரண்பட்டுக் கொண்டு வாழ்க்கையை இழந்து விடக் கூடாது.

வாழ்க்கைக் காலம் மிகவும் குறுகியது. மாணவர்களாகிய நீங்கள் எங்கே பயணிக்க வேண்டும் என்ற உயரிய கனவோடு சிறந்ததைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். 90 சதவீதமான உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் திராணி உங்களிடமே உள்ளது. வாழ்க்கையை வீணடிக்காமல் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மையளிக்கக் கூடிய விதத்தில் பயன்படுத்தி மகிழ்ச்சியாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

நாம் எம்மைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு எமது பிரதிபலிப்பைக் காட்ட முடியும். பலமுறை சிந்தித்துச் செயற்படுங்கள். ஒரு போதும் கல்வியைக் கைவிடாதீர்கள். கடந்த காலத்தில் நிகழ்ந்த ஒவ்வொன்றையும் மறந்து ஒவ்வொருவரையும் மன்னிக்கவும் வேண்டும். நல்லதோ கெட்டதோ நிலைமைகள் அவ்வப்போது மாறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அக்குறணைக்கு ஜீசஸ் வந்தாரா? பரபரப்பை ஏற்படுத்திய கடிதம்



(கண்டி)

கண்டி இனக்கலவரத்தின் பின்னர் அக்குறணைப் பிரதேசத்துக்கு ஜீசஸ் (முஸ்லிம்களின் நம்பிக்கையின்படி ஈசா நபி) வந்து சென்றதாக பரபரப்பான தகவல்கள் பரவிக்கொண்டிருக்கின்றன.

அக்குறணை பிரதேசத்தில் தன்னை ஜீசஸ் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட மர்ம நபரை பல்வேறு தனி நபர்கள் சந்தித்துள்ளதுடன், இச்செய்தி அப்பிரதேசத்தில் பரபரப்பாக பரவி வருகின்றது.

அக்குறணையில் பாதிக்கப்பட்ட சில மக்களை சந்தித்து ஆறுதல் கூறிய குறித்த மர்ம நபர், அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக, நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேரியின் மகன் என்று ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் கையெழுத்திட்டு நல்லிணக்கம் தொடர்பான வேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்றையும் அவர் பொதுமக்களிடம் வழங்கியுள்ளார். குறித்த கடிதத்தில் அரபியிலும் சில வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. (இ-7)

# எனது மகனை 10 வருடங்களாக தேடி அலைகின்றேன்-தந்தை

## "ஜெனிவாவில் நீதி கோரல்"

(கொழும்பு)

எனது மகனை 10 வருடங்களாகத் தேடி அலைகின்றேன் என்று 2008 ஆம் ஆண்டில் காணாமல் போன மொரட்டுவை பல்கலைக் கழக மாணவனின் தந்தையார் நேற்று முன்தினம் ஜெனிவாவில் தெரிவித்தார்.

மொரட்டுவை பல்கலைக்கழக மாணவன் கடந்த 2008 ஆம் ஆண்டு காணாமல் போன நிலையில் அவரது தந்தையார் தர்மகுலசிங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நீதி கேட்டு குரலெழுப்பியுள்ளார்.

எனது மகன் கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி லங்கா பெல் நிறுவனத்திற்கு பயிற்சிகளை பெற்றுக்கொள்ள சென்றிருந்தார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. இப்போது பத்து ஆண்டுகள் ஆகின்றன. இந்த காலத்தில் கொழும்பில் வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் தலைமை அலுவலகத்திலும், குற்றப்புலனாய்வு பிரிவு உள்ளிட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் செய்துள்ளோம். அதேபோல் அமைச்சர்கள் பலரிடம் தமிழ் அமைச்சர்கள் பலரிடமும் இறுதியாக பிரதமர் மற்றும் ஜனாதிபதி என அனைவரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம்.

காணாமல் போனோர் குறித்து கண்டறிய அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவிலும் நான் சாட்சியம் வழங்கியுள்ளேன். முழுமையான விபரங்களை இதில் கொடுத்துள்ளேன்.

எனது மகன் காணாமல் போனமை குறித்து ஆதாரபூர்வமான தகவல்களை நான் சேகரித்துக் கொண்டுள்ளேன்.


இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இயங்காத பொம்மையாக செயற்பட்டு வருகின்றது. அதன் செயற்பாட்டால் எமக்கு எந்த நன்மையும் இல்லை. பொலிஸாரும் தகவல்களை பதிவு செய்து கொண்டுள்ளதே தவிர உண்மைகளை கூறவோ கண்டறியவோ முடியாதநிலைமை காணப்படுகின்றது. இதுவரை எந்த முன்னேற்றங்களும் இல்லை.

பூசா முகாமில் எனது மகன் உள்ளார் என்ற தகவல் கிடைத்து எனது மனைவி அங்கு சென்றிருந்தார். எனது மகன் குறித்து முழுமையான தகவல்களை கொடுத்து அவரை அடையாளப் படுத்திய பின்னர் பார்வையிட அனுமதி வழங்கப்படுவது வழக்கம். அதே நடைமுறையில் எனது மகன் இருக்கின்றார் எனக் கூறி அனுமதி வழங்கப்பட்டது. அதன்பின்னர் எனது மனைவி அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிறிது நேரத்தின் பின்னர் யாருடைய தலையீடு என தெரியவில்லை. எங்களை தடுத்துவிட்டனர். பின்னர் அவர் பிரத்தியேகமாக ஒரு சிறையில் இருப்பதாகவும் அங்கு எவருக்குமே பார்வையிட அனுமதி இல்லை எனவும் நாம் அறிந்து கொண்டோம். மீண்டும் நாம் சில முயற்சிகளை மேற்கொண்டோம். அங்கு உள்ள சில பொலிஸ் உறுப்பினர்களுக்கு எனது மகன் குறித்து தகவல்கள் தெரியும் என உறுதியாகக் கூற முடியும். எனது மகனின் தொலைபேசியை பாவித்தது ஒரு பொலிஸ் அதிகாரி என்பது நீதிமன்றத்தில் உறுதியாக்கப்பட்டுள்ளது. அவரது பெயர் சரத் சந்திர என தெரிவித்துள்ளனர்.

எனக்கு மேலும் தகவல்கள் கிடைக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாழைத்தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த முண்டம் மீட்பு!



(கொழும்பு)

கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில்கொழும்பு-வாழைத் தோட்டப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த கொஸ்மல்லி எனும் பாதாள உலக உறுப்பினரின் தலைக்குரிய முண்டமாகக் கருதப்படும் மனித முண்டம் அங்குனுகொலபெலஸ்ஸ - முரவெசிஹேன, கோத்தாபயகமவில் உள்ள வாழைத்தோட்டம் ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேக நபர்கள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் கம்புறுபிட்டிய பொலிஸார் ஊடாக கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இவ்வாறு அந்த முண்டப்பகுதி மீட்கப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதான நீதவான் குஷிகா குமாரசிரியின் முன்னிலையில் அம்பாந்தோட்டை சட்ட வைத்திய அதிகாரி சிசிர செனவிரத்னவின் வழி நடத்தலில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் மற்றும் தடயவியல் பிரிவினரினால் இந்த உடல் பகுதி தோண்டி எடுக்கப்பட்டு மேலதிக பரிசோதனைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் குறித்த உடல் பகுதி தொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுக்கப் படவுள்ளதுடன்,

அதன் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலுள்ள கொஸ்மல்லியின் தலைப் பகுதியில் இருந்து பெறப்பட்ட டி.என்.ஏ. கூறுகளுடன் ஒப்பீடு செய்து உடல் பகுதி தொடர்பில் உறுதியாக அறிக்கை தயார் செய்யப் படவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைத்தோட்டப் பகுதியில் கறுப்பு நிற பொலித்தீன் பையில் போடப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி பொலிஸாரால் கொஸ்மல்லி எனும் பாதாள உலக உறுப்பினரின் வெட்டி வேறாக்கப்பட்ட தலை மீட்கப்பட்ட நிலையில் அவரது எஞ்சிய முண்டப் பகுதி அங்குனு கொலபெலஸ்ஸ பகுதியில் புதைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணையாளர்கள் கடந்த சனியன்று கண்டறிந்தனர்.

இந் நிலையில் அங்குனு கொலபெலஸ்ஸ - முரவெசிஹேன, கோத்தாபயகம பகுதியில் வாழை நட்டப்பட்டிருந்த விவசாய நிலத்துக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குள் அந்த உடல் பகுதி புதைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகளில் கைதாகியுள்ள சந்தேக நபர ஒருவர் வாக்கு மூலம் அளித்த நிலையில் அந்த இடத்தை அகழ்ந்து கொஸ்மல்லியின் தலையற்ற முண்டத்தை மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

அதன்படி அந்த இடமானது, நேற்று முன்தினம் தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எல்.ஶ்ரீதாலின் ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு விசேட பாதுகாப்புப் பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

அன்றைய தினமே கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சொய்ஸாவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சர் சந்ர திலக பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வா தலைமையிலான சிறப்புக் குழு, குறித்த பகுதிக்குச் சென்று தங்காலை தடயவியல் பிரிவு பொலிஸாருடன் இணைந்து ஸ்தல விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

அதன்படி அங்குனு கொலபெலஸ்ஸ நீதவான் முன்னிலையில் கொஸ்மல்லியின் எஞ்சிய உடலை தோண்டி எடுக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையிலேயே தோண்டி எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யுத்தத்திற்குப் பின்னர் தடுமாறும் இலங்கை

## வியாழேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமாறு கால சூழலில் நாடு தடுமாறி திணறுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள தன்னாமுனை புனித ஜோசெப் கல்லூரியின்43வது ஆண்டுநிறைவை முன்னிட்டு கல்லூரி அதிபர் மரியான்தம்பி பற்றிக் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வுகளில் போப்பாண்டவரின் இலங்கைக்கான பிரதிநிதி ஆயர் கலாநிதி பியரென் நுயன் வன் டொற், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப், கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்துஸித்த பனான்வல மற்றும் படையதிகாரிகள், அடிகளார், கன்னியாஸ்திரிகள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய வியாழேந்திரன், இலங்கைத் திருநாட்டில் தலைதூக்கிய இனவாதமும் மதவாதமும் இன்று சர்வதேசம் வரை நம்மைக்கொண்டு சென்று நிறுத்தியுள்ளது.

யுத்தம் ஏற்பட்டு அதன் பின்னரான துப்பாக்கிச் சூடுகள் ஓய்ந்த நிலையில் ஏற்பட்டுள்ள நிலைமாறு காலச் சூழலில் நாடும், நாட்டு மக்களும், சர்வதேசமும் இலங்கை பற்றி ஒரு ஸ்திரமான சூழலுக்குள் வர முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதையே சமகால நிகழ்வுகள் நிரூபிக்கின்றன.

நாங்கள் அனைவரும் இலங்கை மாதாவின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இனவாதத்தையும் மதவாதத்தையும் மறந்து செயற்பட்டால் அமைதியைக்கொண்டு வரமுடியும்.




இனவாதம், மதவாதம் அற்ற புதியதொரு இளஞ் சமுதாயத்தை உருவாக்கி அமைதியான நாடாக அவர்களுக்கு இந்த நாட்டை கையளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 45 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 50 | 60 | 60 | 50 |
| தக்காளி | 40 | 30 | 20 | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 50 | 40 | 40 |
| சோளா | 20 | 30 | 30 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 80 | 80 | 100 | 160 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 60 | 50 |
| புடோல் | 50 | 80 | 25 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 30 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 75 | 140 | 150 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 200 | 110 | 140 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 60 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | — | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 60 | 50 | 40 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 60 | 160 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 40 | 80 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 410 | 400 | 600 | 600 |
| போஞ்சி | 40 | 140 | 70 | 100 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | — | — | 60 | 60 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 60 | 80 | 80 | 80 |
| தேங்காய்(ஒன்று) | 80 | 100 | 35-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 160 | 140 | 100 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | — | 120 | 160 | 80 |
| முள்ளங்கி | 30 | 100 | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | -- | — | 100 | 70 |

# தியவன்னா ஓயாவில் கவிழ்ந்த சொகுசு காரின் உரிமையாளர் விளக்கமறியலில் வைப்பு!



(கொழும்பு)

பத்தரமுல்லை- தலவத்துகொட பிரதேசத்தில் தியவன்னா ஓயாவில் கவிழ்ந்த பி.எம்.டப்ளியூ காரின் உரிமையாளர் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் நேற்று கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர் நேற்று முன்தினம் தனது சட்டத்தரணியுடன் பொலிஸில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் பொரலை பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் என்பதுடன்; இவர் அமைச்சர் ஒருவரின் உறவினர் எனத் தெரியவந்துள்ளது. (இ-7)

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னால்...

– கவிஞர் நா.முத்துக்குமார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாயில்லாப் பிள்ளைகளுக்காகவேனும் தந்தையை விடுதலை செய்க!

தனிநபர் முதல் உலகம் வரை விரிந்து பரந்துள்ள இந்தப் பூமிப்பந்தானது தர்மத்தின் தூண்களால் தாங்கப்படுகின்றது.

தர்மத்தின் தூண்களை அதர்மம் உடைக்குமாயின் இந்தப் பூமி எதனையும் தாங்க முடியாது போகும்.

ஆக, தனிநபர் முதல் உச்சமான அதிகாரம் கொண்டவர் வரை தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அப்போதுதான் இந்தப் பூமாதேவி அனைத்தையும் தாங்கி நின்று காப்பாற்றுவாள்.

இதை நாம் கூறும்போது, இஃதென்ன மெய்ஞ்ஞான போதனை என்று சிலர் நினைக்கலாம். ஆனால் உண்மை அதுதான்.

இந்த உண்மையைக் கூறவந்ததன் காரணமெல்லாம் கிளிநொச்சியில் தாயை இழந்த பச்சிளம் பாலகர்கள் அரசியல் கைதியாக ஆயுள் தண்டனை அனுபவிக்கும் தம் தந்தையையும் பிரிந்து அநாதைகளாக நிற்பதை சுட்டிக்காட்டுவதுதான்.

ஆம், ஆயுட்தண்டனை அனுபவிக்கும் அரசியல் கைதி ஆனந்தசுதாகரன், தன் மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காக பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் கிளிநொச்சிக்கு வந்தார்.

மூன்று மணித்தியால அனுமதியுடன் வந்து மீளவும் சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய போது, அவரது மகளான பச்சிளம் பாலகியும் அந்தச் சிறைச்சாலை வாகனத்தில் ஏறமுற்பட்டாள்.

இந்தச் சம்பவம் அனைவரையும் நெக்குருக வைத்தது என்ற தகவல் ஏலவே அறிந்தது.

இப்போது நாம் கேட்பதெல்லாம் இளம் தாய் மரணமடைந்து விட்டாள். தந்தை சிறையில். அந்தக் குழந்தைகளின் கதி என்ன என்பது தான்.

நடந்த சம்பவத்தைப் பார்த்து கண்ணீர் விடுவதால் எந்தப் பயனுமில்லை. உடனடியாக அந்தத் தந்தையின் விடுதலைக்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

இந்த நாட்டின் ஜனாதிபதி நினைத்தால் பொதுமன்னிப்பு வழங்க முடியும் என்ற அடிப்படையில், தாயை இழந்த அந்தக் குழந்தைகளுக்காக – தந்தையுடன் செல்லும் நோக்கில் சிறைச்சாலை வாகனத்தில் ஏற நினைந்த பிள்ளைக்காக, சிறையில் இருக்கும் தந்தையை விடுதலை செய்யுமாறு கேட்பது; மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், மனிதநேய அமைப்புக்கள் அனைத்தினதும் தார்மீகக் கடமையாகும்.

ஆகவே காலம் தாழ்த்தாது மதபீடங்கள், அரசியல் தலைமைகள் உடனடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அவருக்கு நிலைமையை எடுத்துரைக்க வேண்டும்.

கூடவே சிங்கள, ஆங்கில ஊடகங்கள்; தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறமுற்பட்ட – தாயை இழந்த அந்தப் பாலகியின் நெக்குருகும் செயலை அனைவரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்த வேண்டும். இது நடக்கும் போது, தந்தையின் விடுதலை நிச்சயம் சாத்தியமாகும்.

இதற்கு மேலாக எங்கள் பரோபகாரிகள் அந்தக் குழந்தைகளின் குடும்பத்துக்கு உதவுங்கள். இதுவே தர்மமாகும்.

## சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம்

### நாடாளுமன்றில் வரவுள்ளது: ரவிநாத் ஆரியசிங்க

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் மனித உரிமை தரங்களைக் கொண்டிருக்கும் புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை உருவாக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஜெனிவாவிற்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத தடுப்பு சட்டம் உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்ப்பு உட்பட நடைமுறைகள் முடிந்தவுடன், நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமரசம் மற்றும் இடைநிலை நீதி ஆகியவற்றை முன்னெடுத்து செல்லும் வகையில் கடந்த 6ஆம் திகதி நஷ்டஈடு வழங்குவதற்கான அலுவலகத்தின் உருவாக்கத்திற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டம் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளதாகவும் ஜெனிவாவிற்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கண்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் தனிநபர்களால் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த அவர், இந்த கோழைத்தனமான செயல்களுக்கு ஜனநாயக, பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தில் இடமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் பதவி நீக்கம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ்ஆணைக்குழுவின் செயலாளர் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டுள்ளதாக ஆரியதாஸ குரே தெரிவித்துள்ளார்.

என்னை அப் பதவியில் இருந்து நீக்கியமை குறித்தும் தனது வயதெல்லையே பதவி நீக்கத்திற்கு காரணம் என தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆரியதாஸ குரே ஒப்பந்த அடிப்படையிலேயே கடமை புரிவதுடன் இவரது பதவிக் காலம் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மைத்திரியும் மகிந்தவும் புடினுக்கு வாழ்த்து தெரிவிப்பு

(கொழும்பு)

ரஷ்ய தேர்தலில் சாதனை வெற்றியை படைத்துள்ள ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புடினின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின் வளர்ச்சிப் பாதையில் பாரிய முன்னேற்றம் ஏற்படும் என்றும், அதன்மூலம் ரஷ்ய மக்கள் தமது இலக்கை அடைந்து கொள்வார்கள் என்றும் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்தும் வலுப்பெறுமென எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த, புடினுக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் 76 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளுடன் அமோக வெற்றிபெற்ற ஜனாதிபதி விளாடிமிர் புடின், நான்காவது தடவையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### எப்படிச் சொன்னாலும் பலனுண்டு



✦ பணக்காரன் வீட்டு வேலைக்காரி அந்த வீட்டின் வேலைகளை செய்தாலும், அவளுடைய சிந்தனையெல்லாம் தன் வீட்டின் மீதே இருக்கும். எஜமானரின் குழந்தைகளை எல்லாம் தன் குழந்தையாகப் பாவித்தாலும், அக்குழந்தைகள் தனக்கு சொந்தமானவர்கள் அல்ல என்பதை அவள் உள்மனம் நன்கு அறிந்திருக்கும். அதுபோல, உலக வாழ்வில் ஈடுபட்டாலும் இறைவனே நமக்கு சொந்தமானவன் என்னும் உள்ள உறுதியோடு வாழ வேண்டும்.

✦ மனம் பால் போன்றது. அதனைத் தண்ணீராகிய உலகத்துடன் கலந்தால் இரண்டும் உடனே கலந்து விடும். முதலில் பாலைக் காய்ச்சி, உறை விட்டு தயிராக்கினால் கடைந்து விடலாம். கடைய கடைய தயிரிலிருந்து வெண்ணெய் உண்டாகும். வெண்ணெயை நீரில் வைத்தால் அது நீருடன் கலப்பதில்லை. மிதக்க தொடங்கி விடும். அதுபோல், பக்தியாகிய ஞானத்தை கடைந்தெடுத்தால் உலகமாகிய நீரில் மிதக்கலாம். உலகத்துடன் கலக்காமல் தனித்து நிற்கும் வலிமை உண்டாகும்.

✦ தெரிந்து சொன்னாலும், தெரியாமல் சொன்னாலும், தன்னறிவில் சொன்னாலும், அறியாமல் சொன்னாலும், எந்த நிலையில் சொன்னாலும் பகவான் நாமத்தைச் சொன்னதற்கான பலன் ஒருவனுக்கு நிச்சயம் உண்டு. அப்படி சொல்லும்போது மலையளவு பாவங்கள் குவிந்திருந்தாலும், பஞ்சுப்பொதி மீதிட்ட நெருப்பினை போல் எரிந்து சாம்பலாகி விடும்.

## திருமணத்துக்காக கட்டப்பட்டிருந்த வாழைக்குலை களவாடப்பட்டுள்ளது

### கோண்டாவில் பகுதியில் சம்பவம்

திருமண வைபவத்துக்காக மண்டபத்தின் முன்னால் கட்டப்பட்டிருந்த வாழைக்குலை இரவோடு இரவாக திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று கோண்டாவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெறவிருந்த திருமண வைபவத்துக்காக நேற்று முன்தினம் மாலை மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மண்டபத்தின் முன்னால் வாழைக்குலைகள் கட்டப்பட்டிருந்துள்ளன.

இந்த நிலையில் நேற்று காலை திருமணத்துக்கான ஆயத்தங்கள் நடைபெற்ற வேளை மண்டபத்தின் முன்னால் வைக்கப்பட்டிருந்த வாழைக்குலையை காணாது அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இரவோடு இரவாக அந்த வாழைக்குலை திருட்டுப்போயுள்ளதை அறிந்த ஏற்பாட்டாளர்கள், மீண்டும் புதிய வாழைக்குலைகளை வைத்து மண்டபத்தை அலங்கரித்தனர். (ம-9)

## உலக நீர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி

"இயற்கையோடு வாழ்வோம், நீர்வளம் காப்போம், சுகநலம் பேணுவோம்" என்ற தொனிப்பொருளில், உலக நீர் தின மாபெரும் விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பமாகவுள்ளது.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தாய்மார் கழகங்களின் ஏற்பாட்டிலும் மானிடம் அறக்கட்டளை இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் அனுசரணையிலும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியானது, வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. (ம-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**குளியலறை எவ்வாறு அமைய வேண்டும்?**

கிழக்கில் குளியலறை இருப்பது- மிகச்சிறப்பு

வடக்கில் குளியலறை இருப்பது- இன்பம்

தெற்கில் குளியலறை (நீர்த்தேக்கம் அல்லாமல்) இருப்பது: சுபத்தன்மை


மேற்கில் குளியலறை (நீர்த்தேக்கம் அல்லாமல்) இருப்பது: சுபத்தன்மை

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்கு தீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன் கட்டு, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, குமுழமுனை, கரியாலைப்படுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

# வலி.வடக்கு பிரதேச விளையாட்டு விழா அளவெட்டி ஞானவைரவர் சம்பியன்









வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டியின் இறுதி நிகழ்வு அண்மையில் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் அருணோதயாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசஅதிபர் நா. வேதநாயகன் கலந்து சிறப்பித்தார்.

அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழகம் ஏழு போட்டிகளில் முதலிடங்களையும் இரு போட்டிகளில் இரண்டாமிடங்களையும் பெற்று 84 புள்ளிகளுடன் மூன்றாவது வருடமாகவும் வலிகாமம் வடக்கின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

64 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தை கணேசன் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

2018 இன் சிறந்த தடகள வீரராக அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழக வீரன் ச. யதுஷன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சிக்சருடன் போட்டியை முடிக்கும் வித்தையை டோனியிடம் கற்றுக் கொண்டேன் -கார்த்திக்



இலங்கையில் நடந்த 3 நாடுகள் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா சம்பியன் பட்டம் பெற்றது. பரபரப்பான இறுதிப் போட்டியில் பங்களாதேசத்தை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தியா கோப்பையை வெல்ல தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் காரணமாக இருந்தார்.

2 பவுண்டரி, 3 சிக்சருடன் 29 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி பந்தில் சிக்சர் அடித்து முத்திரை பதித்தார்.

நியூசிலாந்தை சேர்ந்த குப்தில், ஸ்கொட்லாந்து வீரர் ரியான் ஆகியோர் இதற்கு முன்பு 4 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது சிக்சர் அடித்து வெற்றி பெற வைத்து இருந்தனர்.

இந்த நிலையில் கடைசி பந்தில் சிக்சர் அடித்தது டோனியிடம் இருந்து கற்ற திறமை என்று தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற ஆட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் திறமை அனுபவத்தின் பலனாக கிடைப்பது என்று நினைக்கிறேன்.

இத் திறமைகளை விலைக்கு வாங்க முடியாது. அனுபவத்தின் காரணமாகவே கற்றுக் கொள்ள முடியும்.

இதுபோன்ற இக்கட்டான நேரங்களில் நிதானமாக கையாள வேண்டும். இதற்கு டோனியின் ஆட்டங்கள் சிறந்த உதாரணம்.

அவர் எவ்வளவு நிதானத்துடன் கையாள்வார் என்பதை பார்த்து இருக்கிறோம்.

அவரை போன்ற வர்களிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்ள முடியும்.

ஒரு ஆட்டத்தை எப்படி வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்பதை டோனியிடம் இருந்து கற்றுக் கொண்டேன்.

கடைசிப் பந்தில் சிக்சர் அடித்ததை மிகவும் அற்புதமாக உணர்கிறேன்.

இது என் வாழ்நாள் முழுவதும் நினைவலைகளில் இருக்கும். (க)

# சூதாட்டப் பெண்ணுடன் தொடர்பு மாட்டினார் சமி



சூதாட்ட கும்பலை சேர்ந்த அலீஷ்பா என்ற பெண், கிரிக்கெட் வீரர் சமி தனக்கு நண்பர் மட்டுமே எனத் தெரி வித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது சமியின் மனைவி ஹசின் ஜகான், கடந்த 3 ஆண்டுகளாக தனது கணவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

மேலும், தனது கணவர் பாகிஸ்தானைச் சேர்ந்த அலீஷ்பா என்ற பெண்ணுடன் சேர்ந்து, சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் ஹசின் ஜகான் தெரிவித்தார்.

இந்நிலையில், தற்போது இது குறித்து அலீஷ்பா கூறுகையில், 'நானும் சமியும் நல்ல நண்பர்கள். சமியின் மனைவி கூறுவது போல எங்களுக்குள் எந்த விதமான மோசமான தொடர்பும் இல்லை.

அவர் ஏன் அப்படி குற்றச்சாட்டு வைக்கிறார் என்று தெரியவில்லை. பொலிஸார் தான் இதில் விசாரிக்க வேண்டும்.

நாங்கள் பேஸ்புக் மூலம் நண்பர்கள் ஆனோம், அவரை எனக்கு மூன்று ஆண்டுகளாக தெரியும்.

முதலில் ரசிகையாக இருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக பேசி தற்போது நண்பர்கள் ஆகியுள்ளோம். எங்களுக்குள் வேறு எந்த உறவும் இல்லை' என தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை-இந்திய வீரர்கள் தரவரிசையில் முன்னேற்றம்

இலங்கையில் நடந்த முத்தரப்பு இருபது-20 தொடர் முடிந்துள்ள நிலையில் புதிய இருபது-20 தரவரிசைப்பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நடந்து முடிந்த முத்தரப்பு தொடரில் பல வீரர்கள் சிறப்பாக செயற்பட்ட நிலையில் தரவரிசையில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இறுதிப் போட்டியில் கலக்கிய இந்திய வீரர் தினேஷ் கார்த்திக் 126-வது இடத்திலிருந்து 95-வது இடத்துக்கு முன்னேறியுள்ள நிலையில் முதல் முறையாக 246 புள்ளிகளை பெற்று அசத்தியுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர் யுவேந்திர சாஹல் 12 இடங்கள் முன்னேறி இரண்டாவது இடத்துக்கு வந்துள்ளார்.

அதேபோல வாஷிங்டன் சுந்தரும் 151 இடங்கள் முன்னேறி 31ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

இலங்கை வீரர்கள் குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், அகில தனஞ்ஜய ஆகியோரும் தரவரிசைப் பட்டியலில் முன்னேற்றம் கண்டுள்ளனர். (க)

# என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் கெஞ்சும் பங்களாதேஷ் வீரர்

பங்களாதேஷ் அணியின் தோல்விக்கு காரணமாக இருந்த அந்த அணி வீரர் ருபெல் ஹொசைன், ரசிகர்கள் தன்னை மன்னிக்க வேண்டும் என்று விரும்புவதாக தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்ற முத்தரப்பு இருபது-20 தொடரில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது. ஆட்டத்தின் 19வது ஓவரில், பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர் ருபெல் ஹொசைன் 22 ஓட்டங்களை விட்டு கொடுத்தார்.

இதுவே இந்திய அணி வெற்றி பெற முக்கிய காரணமாக அமைந்தது. இந்நிலையில் ருபெல் ஹொசைன் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இது குறித்து ருபெல் ஹொசைன் கூறுகையில், 'இந்தியாவிற்கு எதிரான இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பிறகு பயங்கரமானதாக உணர்ந்து கொண்டிருந்தேன்.

பங்களாதேஷ் அணியின் தோல்விக்கு காரணமாக நான் இருப்பேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை.

நாங்கள் வெற்றியின் விளிம்பு வரை வந்தோம். ஆனால், என்னால் அணி தோல்வியை சந்தித்துவிட்டது. நான் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்கிறேன். அதே நேரம் ரசிகர்கள் என்னை மன்னிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நான் பந்து வீசும்போது என்னுடைய திட்டத்தை விட்டுக்கொடுக்கவில்லை, புதிதாக வரும் துடுப்பாட்ட வீரர்கள் முதல் பந்திலேயே சிக்ஸர், அதன்பின்னர் பவுண்டரி, அதன் பின் சிக்ஸர் அடிக்க முடியும் என்பது எனக்குத் தெரியாது' என தெரிவித்துள்ளார். (க)

## முன்னாள் போராளி...

டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை முன் வைத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த போது, முன்னாள் போராளிகளுக்கான நஷ்ட ஈடு வழங்குவதற்காக 2016ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட பத்திரத்தை அரசாங்கம் நிராகரித்திருப்பதால் தன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்று மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் போராளிகள் முகங்கொடுத்து வருகின்ற பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளில் இருந்து மீண்டெழுவதற்கு போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் நட்டஈட்டைப் போன்று அவர்களுக்கும் நட்டஈடு வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று சபையில் கோரிக்கை முன்வைத்தார். இதற்கு பதில் வழங்கும் போதே சுவாமிநாதன் இதனை தெரிவித்தார். (ம)

## ஐ.நா சபை அங்க...

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவாவில் உள்ள இயக்குநர் ஜோன் ஃபிஷர் இந்த விடயத்தை நேற்று வலியுறுத்தி உள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் நீதி, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக நிலைமாற்றுக் கால நீதிப் பொறிமுறையை ஸ்தாபிப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்கள் அடங்கிய பொறுப்புக்கூறல் முறைமை, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடு தொடர்பான அலுவலகம் என்பன குறித்தே அந்த உறுதிப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும், தற்போதைய ஜெனிவா அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தருணத்தில் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் மட்டுமே நிறுவப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இது தொடர்பில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் தமது கவலையை வெளிப்படுத்தி இருந்ததையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் தாமதத்தை நிறுத்திவிட்டு, தமது கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இதேவேளை, சித்திரவதைகளுக்கு எதிரான மாநாட்டில் இலங்கை அரசாங்கம் கடந்த டிசம்பர் மாதம் இணைந்தமை குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், காணாமல்போனோர் தொடர்பான பணியகத்தை நிறுவியமையானது ஒரு சாதகமான நடவடிக்கையாகும்.

அது தமது பணிகளை விரைவாகவும், முறையாகவும் மேற்கொள்ள வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறிருப்பினும், இலங்கை அரசாங்கம் தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம் காண்பித்து வருகின்றது.

இது பல ஆண்டுகளாக நீதிக்காக காத்திருக்கும் பாதிக்கப்பட்டவர்களினதும், அவர்களின் குடும்பத்தினருக்கும் பாதிப்பாக உள்ளது.

எனவே, அரசியல் ரீதியான காரணங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொள்வதை நிறுத்தி, அதன் உறுதிப்பாடுகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தி உள்ளது. (ம)

## தனியார் வங்கியில்...

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இனந்தெரியாதோர் கத்தியைக் காட்டி அலுவலர்களை அச்சுறுத்திவிட்டு தனியார் வங்கியில் கொள்ளையில் ஈடுபட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

வங்கியில் இருந்து 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கை குறித்த...

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் செய்ட் ராட் அல் ஹுஸைனின் இலங்கை அறிக்கை ஜெனிவாவில் இன்று முன்வைக்கப்படவுள்ளது.

இதையடுத்து, குறித்த அறிக்கை மீதான விவாதம் இடம்பெற உள்ளது.

குறித்த அறிக்கை கடந்த மாதம் மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்டது.

ஜெனிவா தீர்மானத்தின் அடிப்படையில் நிலைமாற்றுகால நீதி கடப்பாடுகளை நிறைவேற்றும் பணிகள் ஒரு ஆண்டுக்கு மேலாக முடங்கிப் போயுள்ளதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

2017 மார்ச்சில் தாம் குறிப்பிட்டவாறு, ஆக்கபூர்வமான ஒத்துழைப்புடன், முக்கியமான கடப்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்பும், சில நடவடிக்கைகளின் முன்னேற்றம் போதுமானதாகவும், தீர்மானகரமானதாகவும் இல்லை.

அவற்றை செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புகள் இல்லை.

அத்துடன், அவற்றை முன்னோக்கி நகர்த்துவதற்கு அரசியல் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பதற்றம் மற்றும் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் 2017ஆம் ஆண்டிலும் முழுவதுமாக நீங்கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது, இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளுக்கு தீர்வு வழங்குவது, போன்றவற்றிலும் எந்த முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

எனவே, இலங்கையில், பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் ஊக்குவிப்பதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடர்ந்தும் முக்கியமான பங்கை ஆற்ற வேண்டும்.

எனவே, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான ஏனைய வழிகளை ஆராயுமாறு உறுப்பு நாடுகளை தாம் கேட்டுக் கொள்வதாக மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் செய்ட் ராட் அல் ஹுசெய்ன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த விவாதத்தில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான உயர்மட்ட குழு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்க உள்ளது.

அமைச்சர்களான சரத் அமுனுகம, பைஸர் முஸ்தபா மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், ஒருங்கிணைக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகம் மற்றும் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தக் குழுவினர் ஜெனிவாவில் விளக்கமளிக்க உள்ளனர். (ம)

## அமெரிக்காவிடம்...

நிதிகள் அமெரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளன.

ஐ.நா. கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சென்றுள்ள தமிழ் பிரதிநிதிகள், ஐ.நாவிற்கான அமெரிக்க தூதுவரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நியூயோர்க்கில் சந்தித்த போதே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, ஐ.நா தீர்மானங்களை இலங்கை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அதற்கான மாற்று வழிகளை ஆராயுமாறும் அவர்கள் அமெரிக்காவை கோரினர்.

நியூயோர்க்கிலிருந்து வொஷிங்டனுக்கு பயணிக்கும் தூதுக்குழுவினர் அங்கு தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் அலிஸ் வெல்ஸையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

குறித்த தமிழ் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தூதுக்குழுவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், கனேடிய தமிழ் காங்கிரஸ், அமெரிக்க தமிழர் செயலணி, உலக தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்கியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத்தொடரில் இன்று நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான விவாதத்தில் இவர்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கைக்கு...

இலங்கை தொடர்பான பூகோள பருவகால மீளாய்வு அறிக்கை நேற்றுமுன்தினம் 37வது மனித உரிமைகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றிய பிரித்தானியாவின் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலையான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கு, இந்த பிரேரணைகளின் பரிந்துரைகளையும், அரசாங்கம் வழங்கிய உறுதி மொழிகளையும் அமுலாக்க வேண்டியது அவசியமானது.

இதேவேளை, இலங்கையில் மனித உரிமை மறல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக தெரிவித்துள்ள ஐக்கிய அமெரிக்கா, இந்த விடயம் கவலையைத் தருவதாகவும் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் மாநாட்டில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றிய அமெரிக்காவின் பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தும் பொறுப்பினை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

அத்துடன் மனித உரிமைகள் பேரவையின்30/1மற்றும்34/1ஆகிய பிரேரணைகளை அமுலாக்குவதற்கு அரசாங்கம் மேலும் ஒரு படி அதிக சிரத்தை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது அமர்வில் நேற்றையதினம் இலங்கை தொடர்பான பூகோள மீளாய்வு அறிக்கை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பூகோள காலக்கிரம மீளாய்வு அறிக்கை என்பது, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கின்ற 193 நாடுகளிலும் நிலவும் மனித உரிமைகள் மட்டம் குறித்த ஆய்வு அறிக்கை. இதுவரையில் 3 சுற்று ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இதில் 3-ம் சுற்றில் இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

குறித்த அறிக்கையின் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் முன்வைக் கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இந்த அறிக்கையின்படி இலங்கைக்கு மொத்தமாக 230 பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றுள் 12 சுயாதீன அங்கீகாரத்துடன் 177 பரிந்துரைகளுக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. (ம)

## நம்பிக்கையில்லா...

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் படி நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெற வேண்டுமானால் 113 சாதாரண பெரும்பான்மை பெறப்பட வேண்டும்.

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களிக்கவில்லையானால் 113 உறுப்பினர்களின் ஆதரவை பெறமுடியாது என கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என பிரதமர் ரணில் உட்பட, ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் சம்பந்தனுடன் கலந்துரையாடியுள்ளனர் என்று கட்சித் தகவல்கள் கூறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 54 பேர் உள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 42 உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் 16 பேரும் ஜே.வி.பி உறுப்பினர்கள் 6 பேரும் உள்ளனர். ஐக்கியதேசியக் கட்சியில் 106 பேர் உள்ளனர். எனவே சபாநாயகரை தவிர்த்து மொத்தமாக 224 உறுப்பினர்கள்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், சபாநாயகருக்கு இரண்டு வாக்குகள் உள்ளன. ஆனால் சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர் என்பதால் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்களிப்பார் என்று கூற முடியாது.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில், 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களித்தால் மாத்திரமே பிரேரணை வெற்றிபெறக் கூடிய வாய்ப்பு உள்ளது.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள 42 உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றும் கூற முடியாது.

ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவில் அதிருப்தியடைந்துள்ளனர். ஆனாலும் கட்சியின் தீர்மானத்தை மீறி அவருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க முடியாது.

இந்த நிலையில் பிரேரணை தோல்வியடையும் என ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசாங்கத்தில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள இரண்டாவது நம்பிக்கையில்லா பிரேரணை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியல்கைதி ஆனந்த...

மகள் ஜனாதிபதி அவர்களிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். பா.ம உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களின் ஊடாக குறித்த கடிதம் ஜனாதிபதி அவர்களிற்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பிரதேச சபைகளிற்கு தெரிவான சுதந்திர கட்சி, பிரதேச சபை உறுப்பினர்கள் குறித்த கடிதத்தினை பெற்று அங்கஜன் இராமநாதன் அவர்கள் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.

இதன்போது தமது தந்தையை விடுதலை செய்து தருமாறு ஜனாதிபதி மாமாவிடம் கோரிக்கையிட்டு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுவன் தெரிவித்தார்.(ம-312)

## முள்ளிவாய்க்காலில்...

அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் இந்த நடவடிக்கை நேற்று பிற்பகல் மேற்கொள்ளப்பட்டது. கனரக இயந்திர வாகனம் கொண்டு சுமார் இரண்டு மணி நேரங்கள் குறித்த அகழ்வு பணி இடம்பெற்ற போதும் அங்கிருந்து எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் அகழ்வு பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

# சிப்பாய் உட்பட மூவருக்கு...

ணம் நிஷாந்த் தனது தொகுப்புரையில் கோரியுள்ளார்.

சங்கானை, முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றுக்குள் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றை கொள்ளையிட்டு சென்றனர்.

மேற்குறித்த துப்பாக்கிச் சூட்டில் சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் கொல்லப்பட்டதுடன் அவரது மகன்கள் இருவரும்படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தெரிவிக்கப்பட்ட காசிநாதன் முகுந்தன் அல்லது சக்தி, பாலசுப்பிரமணிம் சிவரூபன் மற்றும் இராணுவச் சிப்பாய் பேதுறு குணசேன ஆகியோர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அங்கு இடம்பெற்ற சுருக்க முறையற்ற விசாரணைகளின் பின்னர் வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, துப்பாக்கியைப் பயன்படுத்தியமை, குருக்களைக் கொலை செய்தமை மற்றும் மூவரை படுகாயப்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து எதிரிகள் மூவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் யாழ். மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது. வழக்குத்தொடுநர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு தொகுப்புரைகள் நேற்று இடம்பெற்றன.

அரச தரப்புச் சாட்சியங்கள் மற்றும் எதிரிகளிடம் முன்னெடுத்த குறுக்கு விசாரணைகளின் அடிப்படையில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் தனது தொகுப்புரையை முன்வைத்தார்.

3 எதிரிகள் மீதான நான்கு குற்றச்சாட்டுக்களும் தம்மால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்த அரச சட்டவாதி, எதிரிகள் மூவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் மன்றிடம் கோரினார்.

முதலிரண்டு எதிரிகள் சார்பில் சர்மினி விக்னேஸ்வரனும் மூன்றாவது எதிரியான இராணுவச் சிப்பாய் சார்பில் மன்றினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவாவும் முன்னிலையாகி தமது தொகுப்புரைகளை முன்வைத்தனர்.

இந்த வழக்கின் தீர்ப்பு நாளை வியாழக்கிழமை வழங்கப்படும் என திகதியிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், அன்று வரை எதிரிகள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)


## தேவை

கோன் பிஸ்கட் பொதிகள் செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 873 6561 (3295)

அறிமுகம் - Rs. 250/=

சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில் (C-1914)

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

சைவம், அசைவம்

## ஒடியல் கூழ்

பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chickan - Rice & Bites

(C-1914) யாழ் பாடியில்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550*/= Kg

கனடா - 1050*/= Kg

DELIVERY IN 3-5 DAYS (C-1828)

தொடர்புகளுக்கு: 0768226240

●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள் நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி |
| கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு |

## வேலையாள் தேவை

புத்தூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள (மணியம் பில்டிங்) ஸ்ரீகௌதமன் ஹாட்வெயாருக்கு கணக்காளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு : 077 691 1089 (2959)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-1927)

CNR World Wide Express

இல.101 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062

follow us : cnrworldwideexpress

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே

➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)

➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (3296)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| டுபாய் | சுப்பர் மார்க்கட் பணியாளர் விற்பனை பிரதிநிதிகள் | 65,000/- தொடக்கம் 90,000/- | +OT |
| | துப்பரவு பணியாளர்(ஆண்/பெண்) தொழிலாளர்கள் அச்சக பணியாளர் - பெண்கள் | 46,200/- தொடக்கம் | |
| கட்டார் | தண்ணீர் போத்தல் தொழிற்சாலை தொழில்நுட்ப பணியாளர்கள் | 56,000/- தொடக்கம் 120,000/- | |
| சவுதி | பிளாஸ்ரிக் தொழிச்சாலை இயந்திர இயக்குனர்கள் | 56,000/- தொடக்கம் | |
| குவைத் | ஹொட்டேல் பணியாளர்கள் Dish Washer/Steward | 46,350/- தொடக்கம் | |

குறிப்பு: பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்

விபரங்களுக்கு 0777 324 004

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 50, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 (C-1945)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான வெற்றிடங்கள். நேர்முகத் தேர்விற்கு கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது. O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்.

● அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

● வயதெல்லை 18 - 30

தொடர்புகளுக்கு : 077 439 5501, 021 567 9001 (3308)


## ஆடம்பர வசதியுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் இருந்து 4 km தூரத்தில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

● திருமண நிகழ்வுகள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளி மாவட்டத்திலிருந்து வருபவர்கள் மற்றும் ஏனைய சுப நிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்குவதற்குரிய சகல வசதிகளுடன் உண்டு. A/C, NON A/C, தளபாட வசதிகள், சமையல் பாத்திரங்கள், எலற்றோனிக் உபகரணங்கள் என அனைத்து வசதிகளுடன் உண்டு. (30 பேர் வரை தங்கக் கூடியவசதி)

தொடர்புகளுக்கு :- 077 110 4770 (C-1944)


## மரண அறிவித்தல்



பிறப்பு 24 08 1938

இறப்பு 20 03 2018

### வயித்தியலிங்கம்பிள்ளை வேலும்மயிலும்

(ஓய்வுபெற்ற செயலாளர் – மாகாண பொது நிர்வாக செயலகம், வடக்கு, கிழக்கு மாகாணசபை, ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர் – திருகோணமலை, ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் – வடமராட்சி வடக்கு, கிழக்கு)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வ.வேலும்மயிலும் 20.03.2018 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்தியலிங்கம்பிள்ளை - தெய்வானை நாயகிஅம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வயித்தியலிங்கம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ் சென்ற தேவகிஅம்மாவின் அன்புக் கணவரும் மலர் (பிரான்ஸ்), முரளி (லண்டன்), கலைவாணி (கனடா), குமுதினி (பிரதம கணக்காளர், வட மாகாணத் திறைசேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வ.சோமசேகரம், இ.மகாலட்சுமி, வ.திருவடிவேல், வ.சந்திரசேகரம், இ.இராஜலட்சுமி, ஜெ.ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இ.சங்கரலிங்கம், மு.வனிதா, க.பிரேம்குமார், சி.கஜேந்திரன் (பிரதம கணக்காளர், வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ச.கணேஸ், மு.ஹரிஹரன், பி.மிருணாளினி, க.அனன்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலம் சென்ற வ.இராமநாதன், செ.ஜெயபத்மராஜா, சோ.சுசிலி, தி.கமலாதேவி, காலஞ்சென்றவர்களான தி.புனிதவதி, பொ.வேதநாயகி, வ.வேலுப்பிள்ளை, தி.வள்ளியம்மாள், வி.யோகாம்பிகை, ஆ.துளசியம்மா, வ.சற்குணநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2018.03.21) பி.ப 1.30 மணி வரை இல 65, கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய முன் வீதியில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வல்வெட்டித்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் பி.ப 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

65, கனகரட்ணம் மத்தியமகா வித்தியாலய முன் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். Viber : 077 554 4622

தகவல்: குடும்பத்தினர் (3307)


## திருமறைக் கலாமன்றம்



தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

# வெள்ளியில் ஞாயிறு

(திருப்பாடுகளின் காட்சி)

காலம் : மார்ச் 22, 23, 24, 25 - 2018

( வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு )

- நான்கு நாள்களுக்கு -

நேரம் : மாலை 6.45 மணி

( வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி )

இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021 222 2393

- திருமறைக் கலாமன்றம் (C-1921)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.